05905

# வரலாற்றில் வெற்றிலை

15.4

ஆசிரியர்

மா. சந்திரமூர்த்தி, எம். ஏ.,

பதிவு அலுவலர், மதுரை

தமிழ்நாடு அரச

தொல்பொருள் ஆய்வுத்து

1977

முதற் பதிப்பு. 1977 - 1000 பிரதிகள்
தொ. பொ. ஆ. துறை. வெ. எண் 46

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

5905
நூலகம் - சென்னை

ஆசிரியர்
மா. சந்திரமூர்த்தி
பதிவு அலுவலர், மதுரை.

417.0946

அச்சகத்தில்

# முகவுரை

இந்திய நாட்டில் தாம்பூலம் அளித்தல் என்பது மங்கலக் காரியங்கள் அனைத்திற்கும் முன்னோடியாக வும், முடிவாகவும் அமைகிறது. சிறப்பு நிகழ்ச்சி கள் அனைத்திலும் வெற்றிலை பாக்கு வைப்பதும் அவற்றை அங்கு வந்த உறவினருக்கும், நண்பர் களுக்கும் வழங்குவது இன்றியமையாத இந்திய மரபு. விருந்தினர் வந்தவுடன் போடக் கொடுப்பதும், விருந் தினர் செல்லும்போது அவர்களுக்குக் கொடுத்து அனுப் புவதும் வெற்றிலை பாக்காகும்.

இந்திய நாட்டில் எல்லா மாநிலங்களிலும் சாதி, சமய வேறுபாடின்றி அனைவரும் தாம்பூலம் தரித்தலைப் பழக்கமாகக் கொண்டுள்ளனர்.

ஆலயக் கல்வெட்டுக்களில் குறிக்கப்படும் நிவந்தங் களில் தாம்பூல வகைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டி ருப்பது அறியத்தக்கது.

வெற்றிலைக் கொடிக்கால் பயிரிடுவது என்பது சிரமமான வேலையாகும். இதைக் கவனமாகவும், நுட்பமாகவும் செய்ய வல்லவர்கள் தமிழ்நாட்டு கொடிக்கால் பிள்ளைமார்கள். இவர்களால் தமிழ் நாட்டில் பயிரிடப்பட்டு வந்த வெற்றிலை இன்று மராட்டிய மாநிலம் வரைச் சென்று விற்பனையாகிறது. இது,

'கங்கை நதிபுரத்து கோதுமை பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம்'

என்ற தேசியக் கவி பாரதியின் ஆன்மிகக் கனவுகளை மெய்ப்பிக்கும். இந்தியாவின் ஒருமைப்பாட்டைத் தெளிவுபடுத்தும்.

இவ்வெற்றிலையைப் பற்றித் தமிழ்நாட்டு இலக்கியங்கள், கல்வெட்டு, பட்டயம், ஏட்டுச் சுவடி, வாய்மொழி இலக்கியம், நாட்டுப்புற பழமொழிகள், விடுகதைகள் துணைக்கொண்டு இச்சிறு நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

மதுரை,
6-12-77. மா. சந்திரமூர்த்தி.

# தாம்பூலம்

தாம்பூலத்தின் வரலாறு தொன்மைமிக்கது. இந்தியப் பாரம்பரியத்துடன் மிக்க தொடர்புடையது. தாம்பூலம் என்ற சொல் 2500 ஆண்டுகளுக்கு முன்னரே வழக்கில் இருந்திருக்கிறது. கி. மு. 600-இல் காசியில் எழுந்த சுகிருதசம்ஹிதை என்னும் ஆயுர்வேத நூலில் இத்தாம்பூலத்தைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. 2000 ஆண்டுகளுக்கு முன் ஈழநாட்டில் பாலி மொழியில் எழுந்தது மகா வம்சம் என்னும் வரலாற்று நூல்.[1] அந்நூலில் தாம்பூலம் பற்றிய குறிப்பைக் காண்கிறோம். கி. மு. 504-இல் வாழ்ந்த இளவரசி ஒருத்தி தன் காதலனுக்குத் தாம்பூலத்தைக் காதல் பரிசாக அளித்ததை மகாவம்சம் குறிக்கிறது. கி. மு. 161-இல் துத்கமினிக்கும் (Dudhgamini) மலபாரிக்கும் (Malabaris) நடந்த போரில் வெட்டுண்ட வீரர்களின் காயங்களிலிருந்து வடிந்த குருதிநீர், உமிழ்ந்த தாம்பூலத்தின் நிறம் போலத் தோன்றிக் காண்போருக்கு மருட்சியையும் மயக்கத்தையும் அளித்தது என ஒரு வரலாற்று நூல் கூறும். ராஜஸூய யாகத்தை வெற்றி கரமாக நடத்திய தருமராஜன் முதல் தாம்பூலம் பெறத்தகுதியுடையவருக ஆயர்குல கிருஷ்ணனைத் தேர்ந்தெடுத்தான் என பாரதம் கூறும். அவையிலிருந்த பீஷ்மர், துரோணர் ஆகிய பெரியோர்களின் ஆலோசனையொட்டியே இது நடந்ததால் தகுதியுள்ளோர்கள் அவையில் முதல் தாம்பூலம் பெறுவதற்கு அவர்களது குலமுறை தடையாக இருந்ததில்லை என்பதை அறிகிறோம்.

கி மு 4-ஆம் நூற்றுண்டில் வடநாட்டில் எழுந்த சமண இலக்கியங்களிலும் தாம்பூலத்தின் சிறப்பு குறிக்கப்படுகிறது. எனவே சமணர்களும் இந்துக்களைப் போலவே தாம்பூலம் தரிக்கும் பழக்கத்தை கொண்டிருந்தனர் என அறிகிறோம்.

இந்து சமய நூல்கள் சில இல்லத்தாள் எவ்வாறு தன் கணவனுக்கு உணவு, பால், தாம்பூலம், இருக்கை அளித்து உபசரிக்க வேண்டும் எனக் கூறுகின்றன.

கி.மு. 300-இல் இருந்து கி.பி. 200க்கு இடைப்பட்ட காலத்தில் எழுந்த சங்கப் பனுவல்களில் தாம்பூலப் பொருட்களைப் பற்றிய செய்திகளை அறிகிறோம். எட்டுத்தொகை நூல்களில் கலித்தொகையிலும், பத்துப்பாட்டில் மதுரைக் காஞ்சி, பட்டினப்பாலையிலும் இவை பற்றிய குறிப்புகளைக் காணலாம். இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இப்பொருட்களைக் குறித்துச் செல்கின்றன. பின்னர் எழுந்த பெருங்கதை, தேவாரம், திவ்யபிரபந்தம், கம்பராமாயணம், பெரியபுராணம், சீவகசிந்தாமணி இன்ன பிற நூல்களிலும் தாம்பூலப் பொருட்கள் பற்றிய குறிப்புகள் காணக்கிடக்கின்றன. கி.பி. 8–ஆம் நூற்றாண்டு முதல் தமிழக கல்வெட்டுக்களிலும், பட்டயங்களிலும், பின்னர் எழுதப்பட்ட ஓலைச்சுவடிகளிலும் இதன் சிறப்பு குறிக்கப்படுகின்றது. பள்ளு, குறவஞ்சி, அம்மானை முதலிய பிற்கால இலக்கியங்களிலும், நவீன இலக்கியங்களிலும் வெற்றிலை பாக்கு முதலிய தாம்பூலப் பொருட்களின் சிறப்பு குறிக்கப்படுகின்றது. மற்றும் விடுகதை, பழமொழி, நாட்டுப்பாடல் முதலிய ஏட்டறியா இலக்கியங்களிலும் இவை பற்றிய செய்திகளை அறியமுடிகிறது.

தாம்பூலம் தரித்தல் இந்தியர்களின் அன்றாட சமூக வாழ்வில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. உலகிலேயே இந்தியாவில்தான் தாம்பூலம் என்னும் வெற்றிலை பாக்கு போடும் வழக்கம் அதிகமாக மக்களிடையே இருந்துவருகிறது. இந்தியா முழுவதும் உள்ள எல்லா மதத்தினரும் இந்தப் பழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். விருந்தினருக்குத் தாம்பூலம் அளித்து உபசரித்தல் இந்தியப் பண்பாட்டில் சிறப்பான மரபாகக் கருதப்படுகிறது. தாம்பூலத்தை மங்கள பொருளாகவே இந்தியர்கள் கருதுகின்றனர். திருமணக்

காலங்களில் விருந்தினர்களை உபசரிப்பதில் வெற்றிலை பாக்கு முக்கியப் பொருளாக அமைந்துள்ளது. உறவினர்கள், நண்பர்கள் பார்க்க வந்தாலும் மரியாதைக்காகத் தாம்பூலம் தான் முதலில் கொடுக்கப்பட்டு வருகிறது 2 வெற்றிலையைக் கையில் வாங்கி விட்டால் அது பிரமாணம் செய்ததற்கு ஒத்த தாகும். அதனால் தான் திருமணத்திற்கு முன் நிச்சயதாம்பூல வைபவத்தை நம் முன்னோர் வைத்துள்ளனர்.3

இச்சடங்கு 'நிச்சயதாம்பூலம்' 'நிச்சயதார்த்தம்' 'பாக்கு மாற்றல்' எனப் பல்வேறு பெயர்களில் குறிக்கப்படுவதிலிருந்தே தாம்பூலத்தின் சிறப்பு பெறப்படுகிறது. இந்து மதத்தினர் இறைவழிபாட்டிற்குப் பழம், தேங்காய், வெற்றிலை பாக்கு முதலியன வைத்து வழிபடுகின்றனர் இறைவழிபாட்டில் மலருக்குப் பதில் வெற்றிலையை இறைவனுக்குச் சார்த்தலாம் எனப் புட்பவிதி கூறும். ஈமச்சடங்கின்போதும் இறந்தவரை இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லும் பாடையின் மீது வெற்றிலை பொரி வாரி இறைத்து இறுதி மரியாதை செலுத்தும் வழக்கை இன்றும் தமிழகத்தில் காணலாம். இவ்வாறு மங்கலச் சடங்குகளிலும், அமங்கலச்சடங்குகளிலும் இதன் பங்கைக் காணலாம்.

தாசியின் கையால் வாங்கும் வெற்றிலைக்கு வசியசக்தி உண்டு என நாட்டுப்புற மக்கள் நம்புகின்றனர். மந்திரவாதிகள் வெற்றிலையின் மீது அஞ்சனத்தைத் தடவிப் பார்க்கும் வழக்கைக் காணலாம். மருத்துவர்கள் வெற்றிலையைக் கொண்டே பல்வேறு நோய்களை நீக்குகின்றனர். புலால் உணவு உண்பவர்கள் வெற்றிலைப் பாக்கையே அதிகமாக விரும்புகின்றனர். மார்வாரிகள் வெற்றிலைப்பாக்குச் சுண்ணும்புடன் வாசனைப் பொருள்களான ஏலம், கிராம்பு. ஜாதிக்காய் ஜாதிபத்திரி, பச்சைக் கற்பூரம், குல்கந்து ஆகியவற்றைச் சேர்த்து உபயோகிக்கின்றனர். அயராது வேலை செய்யும் கிராமவாசிகள் சோர்வையும், பசியும் மறக்க வெற்றிலை பாக்கு சுண்ணும்புடன் புகையிலை, காசிக்கட்டி, கத்தைக்காம்பு

ஆகியவற்றைச் சேர்த்து வாயில் அடக்கிக் கொள்கின்றனர். கிராமப்புரத்தில் ஆண்பிள்ளைகளுக்கு முறைப்பெண்கள் தாம்பூலம் கொடுத்தாலும் பரிமாறிக் கொண்டாலும் திருமணத்திற்கு இசைவதாகக் கருதுகின்றனர். தாம்பூலம் தரித்த பிறகு நாக்கு நன்முகச் சிவந்தால் தாம்பத்திய உறவில் நெருக்கமும் விருப்பமும் உடையவர்கள் எனக் கூறுகின்றனர். பொதுவாகத் தாம்பூலத்தைப் பகல் உணவிற்குப் பின்பும் பயன்படுத்துகின்றனர். உணவு சீரணிப்புக்காகவும், வாய் மணமாக இருப்பதற்காகவும் தாம்பூலத்தைப் பயன்படுத்துகின்றனர்.

சமீபகாலத்தில் தாம்பூலத்தின் சிறப்புக் கருதி தாம்பூலப்பழக்கம்,[4] தாம்பூலம்,[5] வெற்றிலை,[6] வெற்றிலை பாக்கு[7] என்னும் தலைப்புகளில் பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. அவை தாம்பூலத்தின் நிறைகளையும் குறைகளையும் எடுத்து இயம்புகின்றன.

---

1. 'The Mahavamso' Edited by George Turnour. (1837)
2. தாம்பூலம்–நந்தி–செப்டம்பர் 1971 பக்கம் 31–32.
3. வெற்றிலை-நந்தி-டிசம்பர் 1974
4. 'Betal Habit' - Dr. Smt. A. K. Sayena-Bhavan' Journal, March-8, 1970.
5. 'தாம்பூலம்' - டாக்டர் சிற்சபை, நந்தி, 1961.
6. வெற்றிலை - பி. ஜே. ஜான் - நந்தி, டிசம்பர் 1973.
வெற்றிலை - எம். ஆர். பாலகிருஷ்ணன்–1966.
7. தமிழும் தாவரமும்-வித்வான் – ல. சண்முகசுந்தரம். பக்கம் 121–122. (1970)

அவை இலையின் உருவம், நிறம், சுவை, மணம் ஆகியவற்றில் மாறுபடும்.

### கற்பூரக்கொடி

இது கற்பூர வாசனை கொண்டுள்ளதால், இப்பெயரைப் பெற்று விளங்குகிறது. இலை மென்பச்சை முதல் மஞ்சள் வரையுள்ள நிறத்தையுடையது. இலையின் உருவம் நீண்டிருக்கும். ஐரோப்பியர் போன்ற அயல் நாட்டினரும் இவ்வகையை அதிகம் விரும்புகின்றனர்.

### கல்லாஸ் கொடி

கல்லாஸ்வகை கற்பூர இலையைவிடப் பெரியது. வெற்றிலை அகலமாக காணப்படும். இதன் வடிவம் அடிபாகத்தில் இருதய வடிவம் கொண்டிருக்கும். இவ்வகை கரும்பச்சை நிறமாகவும், கடினமாகவும், காரம் மிகுந்ததாகவும் இருக்கும். இவை 'வெள்ளை வெற்றிலை' என்றும் கூறப்படுவதுண்டு. திருமணங்களிலும், திருவிழாக்களிலும் ஏராளமாக வழங்கப்படும் இவ்வெற்றிலை வகையின் விலையும் மலிவாகயிருக்கும்.

### வட்டக்கொடி

வட்டக்கொடி என்னும் ரகத்தின் இலை பெரிதாயும், வட்டமாகவும், அதிக நாள் வாடாததாயுமிருக்கும். இவ்வகை வெகுநாட்கள் வரை கெடாமலிருக்கக் கூடிய தன்மையுடையது. இவ்வகை இலையை கிராமங்களில் அதிகமாக காணலாம்.

### சித்துக்கொடி

இதன் உருவம் சிறியதாகவும், வெல்வெட்டைப்போல மிருதுவாயும், சுவையுடையதாகவும் இருக்கும். இவ்வகையை அதிக நாள் வைத்திருக்க முடியாது. விரைவாக வாடக்கூடிய தன்மையுடைய இவ்வகையை, பறித்ததும் உடனே விலையிடுவர்.

# வெற்றிலை

இவ்விலையைத் தமிழ்நாட்டினர் 'வெற்றிலை' என்றும் 'வெத்திலை' என்றும் குறிக்கின்றனர். தெலுங்கு நாட்டினர் வெற்றிலை பாக்கை 'தமலபாக்கு' என்றும் 'வக்கா ஆக்கு' என்றும் குறிக்கின்றனர். அரேபியர் இதனைத் 'தம்போல்' (Tambol) என விளிக்கின்றனர். வடநாட்டினர் பான்-கா பட்டா (Pan-ka-patta) எனக் கூறுகின்றனர். தாவரவியல் நூல்கள் 'பைப்பேர் பெட்லே' (Piper-Betle) என்றும் 'சவிகா-பீடல்' (Chavica-Betel) என்றும் குறிக்கிறது. வெற்றிலையின் குடும்பத்திற்குப் 'பைப்ரேஸியே' என்று பெயர்.

## பெயர்

தமிழ் நிகண்டுகள்[1] வெற்றிலைக்கு தாம்பூலம், திரையல் நாகவல்லி, மெல்லிரை, மெல்லிலை என்று பல பெயர்களைத் தருகின்றன. வெற்றிலையின் கொடிக்குத் தாம்பூலி, தாம்பூல வலி, நாகவலி, மூலவல்லி இலைக்கொடி என்று பல பெயர்கள் தரப்பட்டுள்ளன.

வெற்றிலை மிளகு இலையிலிருந்து பரிணமித்ததாகும். மிளகு இலையிலுள்ள காரம் நீங்கலாக ஏனைய பண்புகளை வெற்றிலையில் காணலாம் எனவே காரம் இல்லாத இலை என்னும் கருத்தில் வெற்றிலை என்னும் சொல் பிறந்து இருக்கிறது என்பர்.

## ।வகை

வெற்றிலையில் பல இனங்கள் உள்ளன. அவை ரக்கொடி, கல்லாஸ்கொடி, கம்மாறுவெற்றிலை, .க்கொடி, சித்துக்கொடி, ஜல்லிக்காம்பு எனப்படும்.[2]

## வெற்றிலைக் கொடிக்கால்

வெற்றிலை தமிழகத்தில் பல பகுதிகளில் பயிர் செய்யப் படுகிறது. வெற்றிலை பயிராகும் பகுதிக்கு 'கொடிக்கால்' என்று பெயர். இப்பயிர் மிகவும் கவனமாகவும், நுட்பமாகவும் செய்தல் வேண்டும்.

இதை வளமான பசலை மண்ணிலோ அல்லது களி சேர்ந்த மண்ணிலோ பயிராக்குகின்றனர். பண்படுத்திய நிலத்தில் சிறுசிறு வாய்க்கால்களை வெட்டி கரையில் அகத்திச் செடியை வரிசையாக ஊன்றி வைப்பார்கள். இவற்றுடன் கலியாண முருங்கை, கமுகு, நுணா ஆகிய மரங்களை நடுதலும்உண்டு.

அகத்திச்செடி நன்கு வளர்ந்த பின் அதன் பக்கத்திலும் ஏனைய மரங்களின் பக்கத்திலும் வெற்றிலை கொடிக் கன்றுகளை நடுவார்கள். கன்றுகள் தளிரிட்டு வளர்ந்து அகத்தி கம்பு களிலும், ஏனைய மரங்களிலும் கொடிவீசிப்படரும். கொடியில் கணுவுக்கு ஒரு இலையாக உண்டாகும். இவ்விலைகள் இதயத்தை ஒத்த வடிவமைப்பு உடையன. இவை சுமார் 3 முதல் 9 அங்குல நீளமுள்ளதாக இருக்கும். வெற்றிலைக் காம்புகள் ½—2 அங்குலநீளம் உடையவை.

வெற்றிலைக்கொடி ஆண் கொடி பெண் கொடி என இரு வகைப்படும். வெற்றிலைக் கொடி நட்டு ஆறு அல்லது எட்டு மாதங்கள் தொடங்கி, மாதத்துக்கு ஒருமுறை வெற்றிலை பறிப்பார்கள். இலைகளைக் காம்போடு பறிப்பார்கள். இதற் காகச் சில பகுதிகளின் வெற்றிலை கிள்ளும் வெற்றிலை பிள்ளை மார்கள் தம் வலக்கைபெருவிரலில் கூர்மையான எஃகு நகம் அணிந்து கொள்வதுமுண்டு.

வெற்றிலை பயிரிடுவதே பரம்பரை பரம்பரையாக செய்து .ந்த இனத்தார் தமிழ்நாட்டில் இன்றளவும் அத்தொழிலில் டட்டு வருகின்றனர். மதுரை மாவட்டத்தில் இவர்கள் ாடிக்கால் பிள்ளைமார்' என்ற பெயரில் அழைக்கப்பட்டு ன்றனர்.

கொடிக்கால் பிள்ளைமார் தவிர மூப்பனர், இஸ்லாமியரும் கூட வெற்றிலை பயிரிடும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

வெற்றிலைக் கொடிக்கால்கள் தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில்[3] இலையமுது கூடம், இராதா நல்லூர் கும்பகோணம், கூத்தா நல்லூர், திருவையாறு, மணிக் கிராமம், மன்னார்குடி ஆகிய ஊர்களிலும், செங்கல்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம், மாங்காடு, நெய்குப்பம் ஆகிய ஊர்களிலும், மதுரை மாவட்டத்தில் சோழவந்தான் பொன்மேனி ஆகிய ஊர்களிலும் உள்ளன.

மதுரை ராமநாதபுரம் மாவட்டங்களில் பல இடங்களில் கொடிக்காலைக் காணலாம். இப்பகுதிகளில் சொந்தமாகவும் குத்தகைக்கும் கொடிக்கால் போடுகின்றனர். குத்தகைக் காரர்கள் நிலச்சொந்தகாரர்களுக்கு ஒரு செண்டுக்கு 6 ரூபாய் வீதம் கொடுத்து பயிர் செய்கின்றனர்.[4] வெற்றிலை, நெல், கரும்பு இம்மூன்று பயிர்களும் சுழலாக ஒரு பூமியில் மாறி மாறி பயிர் செய்வது வழக்கம்.

### வெட்டுமண்

வெற்றிலை பயிரிடும் பூமியை உழுவதில்லை. மண்வெட்டியைக்கொண்டு நிலத்தை ஆழ வெட்டி சமன் படுத்துவார்கள். பிறகு வரிவரியாக நிலத்தை வகுப்பார்கள் இவ்வரிகளிக் கிடையே இடைவெளி 2 அல்லது 3 அடி இருக்கும். இவ்வாறு கண்ணியை வெட்டுவதற்கு 'வெட்டுமண்' என்று பெயர். வரிகளில் சால் பிடித்து வெட்டி மண்ணைப் போட்டு சற்று உயரமாக அணைப்பார்கள். இவ்வாறு பூமியை தயார் செய்துகொள்வர்.

### அகத்திக்கால்

ஆடிமாதத்தில் அணைகளின் மீது (பாட்டம்) அ விதை போடுவர். இரண்டு அடி இடைவெளியிட்டு அ

ஊன்றப்படும். அகத்தியின் ஊடே பத்து அடி இடைவெளியில் புளிச்சக்கீரை, முருங்கை, கல்யாண முருங்கை, ஆகியவற்றின் விதைகளையும் நடுவார்கள். இவற்றின் மேல் வெற்றிலைக் கொடி வளர ஏதுவாக இருக்கும். அகத்தி முளைத்தபிறகு, அந்நிலத்தை 'அகத்திக்கால்' என்ற பெயரால் குறிப்பர்.

### சடைக்கால்

புரட்டாசி மாதத்தில் வெற்றிலைக் கொடி நடுவர் இவ்வாறு மூன்று மாதங்களில் வெற்றிலைக்கு முன் அகத்தி வளரும்போது தோட்டத்தை 'சடைக்கால்' என்ற பெயரால் குறிப்பர்.

### இளங்கால்

வெற்றிலைக் கொடி நடுவதற்குமுன் சிறுவாய்க்கால்களில் நீர்பாய்ச்சி அவைகளில் தங்கியுள்ள நீரை, பாட்டங்களின் மீது (அணைகள்) இறைத்து அவற்றை நீரால் நனைப்பார்கள் அகத்தி, புளிச்சக்கீரை, ஆகிய செடிகளின் அடியில் மண்ணைக் கொத்தி வெற்றிலைக்கொடி நடுவதற்கு ஏற்றவாறு தயார் செய்வார்கள்.

இவ்வாறு தயார் செய்யப்பட்ட நிலத்தில், புரட்டாசி ஐப்பசி மாதங்களில் வெற்றிலைக் கொடித் துண்டுகளை அகத்திச் செடிகளின் கீழே நட்டுச் செல்வர். இவ்வாறு வெற்றிலை நட்டு 6 மாதம் வரை இந்நிலம் 'இளங்கால்' என்று அழைக்கப்படும்.

### எடுத்தாக்கை

வளர்ந்த வெற்றிலைக் கொடியை அகத்திக் காலில் கட்டு
இவ்வாறு கட்டுவதற்கு கோரை பயன்படுகிறது.
ரையை கிழித்து அகத்திச் செடியில் எடுத்துக்கட்டும்
றக்கு 'எடுத்தாக்கை' (எடுத்துக் கட்டுதல்) என்று பெயர்.

## கங்குவாடு

தைமாதத்தில் வளர்ந்த வெற்றிலே கொடியை நீண்ட அகத்தி மரத்தின் மேல் தென்னம்பாளையைக் கொண்டு கட்டுவதற்கு 'கங்குவாடு' என்று பெயர். பிறகு வளர்ந்த இரண்டு அகத்தி மரங்களின் முனைகளை சேர்த்து கட்டுவதற்கு 'பிடிகட்டு' என்று பெயர். நீண்டு வளர்ந்து செல்லும் வெற்றிலைக் கொடியை மடக்கிக் கட்டுவதற்கு 'மடக்கு வேலை' என்று பெயர்.

## முதிக்கால்

இவ்வாறு கொடிக்கால் போட்டு மூன்று மாதங்களில் 'சடைக்கால்' என்றும் ஆறுமாதம் ஆனதும் 'இளங்கால்' என்றும் ஒன்றரை வருடம் ஆனபிறகு 'பயிர்க்கால்' என்றும் வெற்றிலே அழியப்போகும் போது 'முதிக்கால்' என்றும், அழிந்த கொடிக்காலுக்கு 'வெட்டுக்கட்டே' என்றும் அழைப்பது வழக்கம்.

இவ்வாறு கொடிக்கால் முதிகாலாகி அழிய 3 வருடமாகும். இவ்வாறு வெற்றிலைக் கொடிக்காலின் பல்வேறு பருவங்களின் பெயர்களை இப்பகுதியில் வழங்கும் வெற்றிலைக் கும்மியால் அறிகிறோம்.

## வெற்றிலைக்கும்மி

வெற்றிலேயே வெற்றிலேயே
வெண் கொடிக்கால் வெற்றிலேயே-நீ
வேகமாய் வளர்ந்த கதை
விபரமாய் சொல்லவேணும்
நான் வளர்ந்த சேதியைத்தான்
நாட்டார் அறியாரோ

களிமண்ணில் காலூன்றி
கொடிக்காலில் குடிவந்தேன்
சரியான தொண்ணூறுக்கு
சடைக்காலும் நானானேன்
இருமூன்று மாசங்களில்
இளங்காலும் நானானேன்
பதினெட்டு மாசங்களில்
பயிர்க்காலும் நானானேன்
மூப்புவந்து எய்தியக்கால்
முதிக்காலும் நானானேன்
விதிமுடித்த வேளைதனில்
வெட்டுக்கட்டே நானானேன்
விருந்துக்கும் மருந்துக்கும்
விருந்தாக நானானேன்[5]

இக்கொடிக்காலைப்பற்றித் தமிழகத் தாய்மார்கள் பாடும் லாட்டுப் பாடலிலும் காணலாம். தன் குழந்தையிடம் மன் வீட்டுச் செல்வச் சிறப்பையும், பெருமையையும் மன்மார் கொண்டு வரும் சீர்வரிசைகளையும் பெருமை ாடு பாடுகின்றாள் தாய்.

'சாதிக்களிப் பாக்கும்
சங்கு வெள்ளைச் சுண்ணாம்பும்
ஏலங் கிராம்பும்
இளங்கொடிக்கால் வெற்றிலையும்
அத்தனையும் கொண்டு
அரியவந்தார் அம்மானார்[6]

இத்தகைய கொடிக்கால்கள் ஆற்றோத்தில் அமைந்திருந்த மற்ெறாரு தெம்மாங்குப் பாடல் அழகாகக் கூறுகிறது.

'ஆத்தோரம் கொடிக்காலாம்
அரும்பரும்பாம் வெத்திலையாம்
போட்டா செவக்குதில்லே
பொன்மயிலே உன்மயக்கம்'[7]

வெற்றிலைக் கொடிக்காலில் எப்பொழுதும் தண்ணீர் இருக்க வேண்டும். மழை பெய்யாத காலங்களில் ஏற்ற நீரை நம்புகின்றனர். ஆனால் ஏற்ற நீர் இறைப்பதற்குத் தடையாகக் கிணற்றிலும் நீர் வற்றிவிடுகிறது. எப்பொழுது மழை பெய்யும், குப்பம் செழிக்கும் என ஏற்றத்தை நம்பி வாழும் மக்கள் ஏங்குகின்றனர். வேணமழை பெய்தால் வெற்றிலை விளையும் என ஏங்கிப் பாடும் நிலையைக் காண்கிறோம்.

'எப்போமழை பெய்யும் குப்பம் பயிரேறும்
குப்பம் பயிரேறும் குடிகள் வந்து சேரும்
கற்பூரம் விளையும் காலமழை பெய்யும்
சொன்னது விளையும் சோதிமழை பெய்யும்
வெற்றிலை விளையும் வேணமழை பெய்யும்
வேணமழை பெய்யும் விடியல் பூசலாடும்
சொன்னது விளையும் சொர்ண பூசையாகும்
தொழுதேன் பகவானே தொண்ணூற்றுடன் ஒன்று

உளரும் பேரும்

தமிழ் நாட்டில் கடம்பு, நாவல், பனை, புன்னை, மருத ஆகிய மரங்களின் அடியாகப் பிறந்த ஊர்ப் பெயர் முறையே கடம்பூர், நாவலூர், பனையூர், பனைத்துறை, புன் நல்லூர் என வழங்கப்படுகின்றன. காஞ்சிக் கொடியு

அடியாகப் பிறந்தவூர்கள் காஞ்சி, காஞ்சிபுரம், காஞ்சிவாயில் என்று அழைக்கப்படுவதுபோல வெற்றிலைக் கொடியின் அடியாகப் பிறந்தவூர் வெற்றிலை முருகன்பட்டி[10] என்றும் அழைக்கப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் பண்டு வெற்றிலை பயிரிட்ட நிலம் 'வெற்றிலைக்குண்டு' எனப்பட்டது. பின்னர் திரிந்து வெத்திலைக் குண்டு > வத்தலக் குண்டு என வழங்கிற்று. இதை ஆங்கிலேயர் பீடல் குண்டு (Betalgundu) என அழைத்தனர். கிணற்று நீரை இறைத்துத் தோட்டப்பயிர் செய்யும் வழக்கம் பன்நெடுங்காலமாக உண்டாதலின் கேணியைக் குறிக்கும் சொற்கள் சிறுபான்மையாக ஊர்ப் பெயர்களில் வழங்கக் காணலாம்.

எடுத்துக்காட்டாக இராமநாதபுரம் மாவட்டம் இராஜ பாளையம் வட்டத்தில் கூமாப்பட்டி அருகில் உள்ள இடம் 'வெற்றிலைக்கேணி' என்று அழைக்கப்படுகிறது.[11] வெற்றிலை கொடிகள் ஆற்றோரக் கொடிக் காலிலும், தோட்டங்களிலும் பயிரிடப்பெற்றனவாதலின் அவ்விடங்கள் 'வெற்றிலைக்கொடிக் கால்[12] 'வெற்றிலைத்தோட்டம்' எனப்பட்டன. இராமநாத புரம் மாவட்டம் 'மண்டபம்' என்ற ஊர் உண்டு. இம்மண்டபத்தைச் சுற்றியிருந்த காடுகளை அழித்த பிறகு இங்கு குடியேறியவர்கள் வெற்றிலை பயிரிட்டனர். அதனால் இவ்வூருக்கு 'வெற்றிலை மண்டபம்' என்ற பெயரும் ஏற்பட்டது.[13]

பண்டு இறைவனுக்கு அடைக்காய் அமுது படைக்கக் கோயிலுக்குச் சொந்தமான இறையிலி நிலங்களிலிருந்து இலையமுது (வெற்றிலை) கொண்டுவரப்பெற்றது. சோழநாட்டில் தலைச்செங்காடு கோயில் இறைவனுக்கு இலையமுதளித்த ஊர் 'இலையமுது கூடம்' என வழங்கப்பட்டது. இன்றும் இவ்வூர் சீர்காழி வட்டத்தில் இலையமுது கூடம் என்றே வழங்கப்படுகிறது. இவ்வாறு மரம், செடி, கொடி, இலை ஆகிய பெயர்களோடு ஊர், பட்டி. கூடம், கேணி என்னும் சொற்கள் சேர்ந்து தமிழ்நாட்டில் வழங்கக் காண்கிறோம்.

அவ்வூர்ப் பெயர்கள் வெற்றிலையின் தொடர்பைக் காட்டுவன வாக அமைகின்றன.

## வெற்றிலைக்கு பூதானம் கொடுத்த ஊர்

பூம்புகாருக்கு ஆறு கல் தொலைவில் புஞ்சை என்னும் ஊர் உள்ளது. இவ்வூர் பண்டு நனிபள்ளி என அழைக்கப் பட்டது. இவ்வூர்ச் சிவன் கோயில் கல்வெட்டு விக்கிரம சோழன் காலத்தில் மும்முடிச்சோழன் பேரம்பலத்தில் தலைச் செங்காட்டு மூலபுருஷர் கூடி, இளவரசி சொற்படி வெற் றிலை வைக்க இராசராசநல்லூரில் பூதானம் செய்யப்பட்ட தைக் குறிக்கிறது. பூதானம் அளிக்கப்பட்ட இராசராச நல்லூர் இன்று சீர்காழி வட்டத்தில் ராதாநல்லூர் என்ற பெயரில் மருவி வழங்கப்படுகிறது.

---

1. சூடாமணி நிகண்டு :
   நறிய தாம்பூல வல்லிதாம்பூலி நாகவல்லி
   செறிதருமிலைக் கொடிப் பேர் திரையன் மெல்லிலையு மாரும்

   ஆசிரிய நிகண்டு :
   குலவு, தாம்பூல மெல்லிரை திரையல்
   மூன்றும் குறிக்கிடும் வெற்றிலைப் பேர்
   இசைந்த தாம்பூலி, தம்பூலவலி ஞகவலி
   யென்பதவ் விலைக் கொடிப்பேர்
2. கலைக்களஞ்சியம், தொகுதி 9, பக்கம்-503.
3. Tanjore District Gazetteers, P. I, vol. I, pp. 60, 255; 1906 F. R. Hemingway.
4. ஏட்டில் எழுதாக் கவிதைகள் - செ. அன்னகாமு, பக்கம்-155.
5. பாடியவர், வெ. காத்தமுத்து சோழவந்தான். திரட் டியவர் கட்டுரை ஆசிரியர்.

6. தமிழக நாட்டுப் பாடல்கள் - மு. வை. அரவிந்தன், பக்கம்-15-1970.

7. இப்பாடலை கட்டுரை ஆசிரியருக்கு அளித்தவர், திரு. மா. கணபதி, கரிசல்குளம்.

8. நாடோடி இலக்கியம் - திரு. ஆர். அய்யாசாமி. பக்கம் - 40.

9. 'குறுங்காற் காஞ்சி சுற்றிய நெடுங்கொடி' - பெரும் பாணு-வரி. 375.
   'குறுங்காற் காஞ்சி' – சிறுபாணு, வரி–179.
   Sangam Polity – Dr. K. Subramaniyam-p. 226.

10 இராமநாதபுரம் மாவட்டம் - சோமலே, பக்கம்-524. கிராமங்களின் அகர வரிசைப் பட்டியல் – பக்கம்-150.

11. இராமநாதபுரம் மாவட்டம் - பக்கம்-514.

12. Ibid p. 56.

13. Ibid p. 278.

# வரலாற்றில் வெற்றிலை

## அகழ்வாய்வில்

*தமிழ்நாட்டில் உறையூர், திருக்காம்புலியூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் இரும்பாலான பாக்குவெட்டிகள் கிடைத்துள்ளன. இவை மத்தியகாலத்தைச் (கி.பி. 10-14) சேர்ந்தவை. இக்காலத்தில் இருந்து வந்த தாம்பூலம் தரிக்கும் வழக்கத்தை இவை உறுதிப் படுத்தும்*[1]

## கல்வெட்டில் வெற்றிலை

*தமிழ்நாட்டு கோயிற் கல்வெட்டுக்களில் வெற்றிலையைப் பற்றிய ஏராளமான குறிப்புகள் காணப்படுகின்றன.*

*இறைவனுக்குப் படைக்கும் அமுதுபடைகளில் உப்பமுது, பருப்பமுது. மிளகமுது, நெய்யமுது போன்று அடைக்காயமுது*[2] *குறிப்பிடத்தக்கது. இவ்வடைக்காயமுது கல்வெட்டுக்களில் இலையமுது,*[3] *வெள்ளிலையமுது,*[4] *வெள்ளிலைப்பற்று*[5] *வெற்றிலையமுது,*[6] *வெற்றிலையமுது*[7] *பாக்கிலை, கொழுந்து,*[8] *எனக் குறிக்கிறது. இப்பெயர்கள் இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப வழங்கப்பட்டன. இவ்வெற்றிலை எண்ணிக்கையிலும்*[9] *எடையிலும்,*[10] *பற்றிலும் அடுக்கிலும்*[11] *குறிக்கப்படுகின்றது. தமிழகத்தில் உள்ள பெரும்பாலான கோயில்களில் இவ்வெற்றிலையமுது குறிக்கப்படுவதால் இதன் பண்டைய வழக்கும் தொன்மைச் சிறப்பும் பெறப்படும்.*

## அளவும் விலையும்

*கி.பி. 9-ஆம் நூற்றுண்டில் பாண்டிய நாட்டில் வெற்றிலையை அடுக்கு, பற்று என்ற அளவுப் பெயர்களில் கணக்கிட்*

டுள்ளனர்.12 அவற்றின் விலையும் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

*4 அடுக்கு = 1 பற்று*
*1020 பற்றின் விலை = 1 காசு*

## வெற்றிலைக்கு வரி

அக்காலத்தில் வெற்றிலை பயிரிடுவதற்கும் விற்பனை செய்வதற்கும் வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. வெற்றிலை, பயிரிடுவதற்கு விதிக்கப்பட்ட வரி 'இலைக்கூலம்'13 எனப்பட்டது. வெற்றிலையை விற்பனை செய்வதற்கு விதிக்கப்பட்ட வரி 'இலைவாணியப் பாட்டம்'14 எனப்பட்டது.

பிற்காலப்பாண்டியர் காலத்தில் ஒரு மா நிலத்தில் வெற்றிலை பயிரிட அரைப்பணம் வரி விதிக்கப்பட்டிருக்கின்றது15 தரிசாகக் கிடந்த கோயில் நிலங்களை வாரத்திற்கு எடுத்து திருத்தி வெற்றிலை, மஞ்சள், இஞ்சி போன்றவற்றைப் பயிரிட்டால் அவ்விளைச்சலில் மூன்றில் ஒரு பாகத்தைக் கோயிலுக்குச் செலுத்த வேண்டும் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கின்றது.16

## வில்லியனூர்க் கல்வெட்டு

புதுவை மாநிலம் வில்லியனூர்க் கல்வெட்டு ஒன்று அச்சுததேவராயர் காலத்தில் (கி.பி. 1542) அவ்வூரில் நடைபெற்ற உரிமைக் கிளர்ச்சி பற்றி விரித்துக் கூறுகிறது.17

## இலைவணிகரும் கைக்கோளரும்

வில்லியனூரில் இருந்த இலைவணிகர்கள் (வெற்றிலை வணிகர்) கைக்கோளர்களுக்கு உரித்தான கண்டியதேவன், காலிங்கராயன், பட்ட மானங்காத்தான், உலகெலாம் வென்றான் ஆகிய விருதுப் பெயர்களைத் தமக்கும் உரியவை என்று உரிமை கொண்டாடினர். அப்பட்டப்பெயர்களைத் தாங்களும் புனைந்து கொண்டனர். அரசு அதிகாரிகளும் இலைவாணிகரி-

டம் கைக்கூலி பெற்றுக் கொண்டு, இச்செயலைக் கண்டும் காணுதவாறும் நடந்தனர்.

## உரிமைக் கிளர்ச்சி

பின்னர் எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருட்டு கைக்கோளர் கள் தம்முடன் தேவாங்கரையும் சேர்த்துக்கொண்டு வில்லிய னூரை விட்டு அகன்றனர். இக்கிளர்ச்சிக்குப் பிறகு, நடந்து முடிந்த இந்நிகழ்ச்சிக்குப் பிறகு நீதி காண திருமலைத்தேவர் மகாராசனின் பெருந்தரத்து அதிகாரியான விசயராயன் என் பவரும், மற்றும் சில உயர்அதிகாரிகளும் முறையான விசா ரணையை மேற்கொண்டனர். இறுதியில் காஞ்சிபுரத்திலிருந்த செப்பேடு கொண்டு வரப்பட்டு படிக்கப்பட்டது. வில்லி யனூர்க் கோயில் சாசனத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது. இதைச் சரிபார்த்த அதிகாரிகள் மேற்கூறிய விருதுப் பெயர் கள் அனைத்தும் கைக்கோளர்களுக்கே உரியனஎன்று தீர்ப்பு வழங்கினர்.

கி.பி. 16-ஆம் நூற்றுண்டின் இடைக்காலத்தில் தோன் றிய உரிமைக் கிளர்ச்சி பற்றிய சாசனத்தால் அக்காலத்தில் வில்லியனூரில் பெருவாரியாக இலைவாணிகர் இருந்தமை புலனுகின்றது[18] கி.பி. 18-ஆம் நூற்றுண்டிலும் இப்பகுதியில் வெற்றிலைத் தோட்டங்கள் நிறைந்திருந்ததை ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பினுல் அறிகிருேம்.[19]

வெற்றிலைக்கு அக்காலத்தில் வரிவிலக்கும் அளிக்கப்பட் டிருக்கின்றது. கி.பி. 16-ஆம் நூற்றுண்டில் (கி.பி. 1579) முகவை மாவட்டத்தில் 'சேடர்கள்' என்ற இனத்தவர் வெற் றிலையைப் பயிரிட்டு வந்தனர். அவர்களில் முதல் போகத் தில் (கன்னிப்பறி) விளைந்த வெற்றிலையை அரண்மனைக்கு கொண்டு வந்து தந்த சேடர்களுக்கு அப்போகத்திற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது[20] இச்சேடர்களே தற்காலத்தில் பாண்டிய நாட்டில் சேனையார் என்ற வெற்றிலை பயிரிடும் பிரிவினராக இருத்தல் வேண்டும்.



வெற்றிலைக்கு நீர் இறைத்தல்–பொன்மேனி, மதுரை மாவட்டம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் திருச்செந்தூர் தாலுக்கா ஆத்தூர் சோமநாதசுவாமி கோயிலில் உள்ள மாறவர்மன் விக்கிரமசோழ பாண்டியனின் 25-ஆம் ஆண்டு கல்வெட்டு ஒன்று இக்கோயிலில் பதிந்து சிவபிராமணர்களுக்கு ஒவ்வொரு அமாவாசை தினத்தன்றும் அளித்த உணவு முதலிய வகைகளில் வெற்றிலையும், பாக்கும் குறிக்கப்பட்டுள்ளது. இதை அளித்தவன் மங்கலக்காலுடையார் கண்டன் ஐய்யனார்.21

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் கி.பி. 13-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த கல்வெட்டொன்று திருவமுதுக்கு நெல் இரு நாழியும், அடைக்காய்அமுதுக்குப் பாக்கு இரண்டும் அளித்ததைக் குறிக்கிறது.22 இதே கோயிலில் விஜய நகர மன்னன் ஸ்ரீவீரவெங்கடபதி தேவ மகாராயர் காலத்தில் (கி.பி. 1559) திருவல்லிக்கேணி தெள்ளிய சிங்கப் பெருமாளுக்குத் திருவமிர்து படைப்பதற்கும், அங்கு கொண்டாடும் வசந்தத் திருநாளுக்கும் பாக்கு வெற்றிலை அளித்ததைக் குறிக்கிறது.23 புரசைவாக்கம் கங்காதரேச்வரர் கோயிலில் உள்ள கி.பி. 16-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த கல்வெட்டு 'வெற்றிலை அடையாளத்துக்கு அரைக்கால் பணம்' இட்டதைக் குறிக்கிறது.24

தாராபுரம் வட்டத்தில் நொய்யலாற்றின் கரையின்மீது பழைய கோட்டைக்கு அருகிலுள்ள ஊர் ஆனூர். இவ்வூரில் சிற்பங்கள் நிறைந்த 'ஆனூரம்மன்' என்னும் கோயிலுள்ளது. இக்கோயிலைக் கட்டுவித்தவர் ஏழாவது பட்டக்காரரான அழகன் சர்க்கரை உத்தம காமிண்ட மன்றுடியார் ஆவர். இக்கோயிலில் வேலை செய்த சிற்பி சோமசுந்தரன், மன்றுடியார் இட்ட தயிர்ச்சோற்றிலும், வெற்றிலை பாக்கிலும் தன் நெஞ்சைப் பறிகொடுத்ததால் அந்நன்றிப் பெருக்கு பாட்டாக உருவெடுத்துக் கல்லிலும் ஏறிவிட்டது.

உயருபுகழ் ஆனூர்வாழ் உத்தமி மண்டபம் கட்ட உவந்து
[வந்து

எண் 5905

பயிர குலப் பெரியோர்கள் பணம் மட்டும் தான் கொடுத்தார்
[பணியாளிக்கு
வயிறுநிறை யச்சோறும் வாய்க்கு வெற்றிலைபாக்கும் வாங்கித்
[தந்து
தயிரொடுமு வேளையிட்ட தர்மமிது அழகன் சர்க்கரைய
[தாமே[25]

இப்பாடலைப் பாடியவன் முன் மண்டபம் வேலை செய்த சிற்பி சோமசுந்தரன் என்ற குறிப்பு அடியில் காணப்படுகிறது.

## பட்டயத்தில் வெற்றிலை

ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்தில் நடந்த ஒப்பந்தம் ஒன்றின் விபரம் தருகிறது மதுக்கரைப் பட்டயம். இதன் நகல் ஓலைச் சுவடியில் உள்ளது.[26]

கொங்கின் 24 நாட்டு கவுண்டர்கள் புதுப்புதுப்பாண்டம் (நவபாண்டம்) பயன்படுத்தவேண்டி, நாட்டுக்கொருத்தர் வீதம் 24 பேர் பாண்டிய நாடு சென்று, 24 வேட்கோவர் (குயவர்) குடும்பத்தை அழைத்து வருகின்றனர். நாடுவிட்டு நாடு வரும் வேட்கோவர் தம் சுற்றத்தை விட்டு நீங்கி வருதலால் பாதுகாப்பு கோருகின்றனர். இருவருக்கும் ஒப்பந்தம் நடக்கிறது. அதன்படி வேட்கோவருக்குப் பல உரிமைகள் வழங்கப்படுகின்றன.

ஒப்பந்தப்படி கொங்கு நாட்டில் கவுண்டர்களுக்கும், மற்றும் கம்மவார், வடுக நாயக்கர், சூரியகுல வம்சத்தார், விஸ்வகுல ஆசாரிகள், சோழிய வேளாளர், பாண்டிய வேளாளர், இராசாக்கள், வடுக ஆசாரிகள் முதலிய சாதியினரின் திருமணத்திற்கு வேட்கோவர் தரவேண்டிய எழுத்துப்பானை, பானை வகைகள், தீபக்கம்பம், விளக்கு, குடம், கரகம், பாலிகை, அரசாணிச்சாலு முதலிய நவபாண்டங்கள் பட்டியலும்[27] அதற்கிணையாக மேற்குறித்த இனத்தோர் வேட்கோவருக்குத் தரவேண்டிய பொருள்கள் என்னவென்ன என்றும் பட்டயத்தில் பட்டியல் தரப்பட்டுள்ளது.[28]

| | | |
|---|---|---|
| (உ-ம்) | அரிசி (படி) | 1 |
| | பருப்பு (படி) | 1 |
| | பாக்கு | 10 |
| | வெற்றிலை | 20 |
| | பழம் | 10 |
| | தேங்காய் | 1 |

கிராம மக்களுக்கு நோய்நொடி வரும்போது குணமானல் கோயிலுக்கு உருவாரம் (பொம்மை) செய்து வைப்பதாக வேண்டிக்கொள்வது பண்டைய மரபு. அதன்படி உருவாரங்கள், குதிரைகள் முதலியன செய்யத் தொடங்கும் முன்னும் அவைகளை முறைப்படி செய்து முடித்துக் கண்திறக்கு முன்னும் வேட்கோவருக்கு வெற்றிலை பாக்கு முதலியன அளிக்கும் வழக்கை இப்பட்டயம் விரித்துக் கூறுகிறது.[29]

கிராமக்கோயில் திருவிழாக்கள் தொடங்குமுன், நள்ளிரவில் குட்டித் தெய்வங்களுக்குக் கிராமசாந்தி செய்வது பண்டைய மரபு. அக்கிராமசாந்தி செய்யும் உரிமை வேட்கோவருக்கு அளிக்கப்பட்டது. அதற்காக வெற்றிலை பாக்கு, வஸ்திரம், நெல், சாம்பிராணி, ஆட்டுக்கிடாய் முதலியன காணிக்கையாக அளிக்கும் வழக்கையும் இப்பட்டயம் குறிக்கிறது.[30]

இப்பட்டயச் செய்தியிலிருந்து பண்டு வேட்கோவருக்கு வெற்றிலை பாக்கு முதலிய தாம்பூலப் பொருட்கள் அளிக்கும் வழக்கை உணரமுடிகிறது. மேலும் வேட்கோவர் போன்ற தொழிலாளர் வர்க்கத்தினருக்கு மேற்தனத்தார் அளித்த சமூக மதிப்பீட்டையும் உணரமுடிகிறது. தாம்பூலப் பொருட்கள் இறைவழிபாட்டிற்கு மட்டுமின்றி அத்திரு உருவங்களை உருவாரமாக உருவாக்கும் வேட்கோவருக்கும் அளித்துச் சிறப்பித்த பண்டைய வழக்கை இப்பட்டயச் செய்திகள் தெளிவுபடுத்துகின்றன.

தாம்பூலப் பொருட்களை இப்பட்டயநகல் 'வெத்திலே' என்ற வழக்குச் சொல்லாலே குறிக்கிறது. இவற்றின் எண்ணிக்கையை எண்ணிட்டும், கௌளி முறையிலும் குறிக்கக் காண்கிறோம். அவ்வாறே பாக்கு எண்ணிட்டும், படி அளவு முறையிலும் குறிக்கக் காண்கிறோம்.


## ஏட்டுச் சுவடியில் வெற்றிலே

இராமநாதபுரம் மாவட்டம் சாத்தூர் வட்டத்தில் நாடார் இனத்தவர் மிகுதி. இவர்கள் கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் திருமங்கலம், பாளையப்பட்டி ஆகிய ஊர்களில் குடியேறிப் பேட்டைகள் அமைத்துக் கொண்டனர். இம் மாவட்டத்தில் விளையும் முக்கியப் பொருட்களைக் கொண்டு வியாபாரம் செய்து பொருளாதாரத்தைப் பெருக்கினர். இவர்களுடைய பொதுநிதி இவர்களுக்குள் விற்பனை வரி போன்று வசூலித்துக் கொள்ளப்படுகின்றது. இதற்கு மகமைப்பணம் என்று பெயர். மகமைப் பணத்தைப் பற்றி 1782-ல் எழுதப் பெற்ற ஓர் ஓலைச்சுவடியிலிருந்து இந் நாடார்கள் எந்தெந்தப் பொருட்களில் வியாபாரம் செய்தனர் என அறிய முடிகிறது.

"கச்சைப்பொதி, வேர்ப்பொதி, நூல்பொதி, கெம்புப் பொதி, புகையிலே தென்பொதி, பஞ்சு தென்பொதி, சவரிப் பொதி இந்த வகைக்கு பொதி க, பணம் க, பாக்கு, மிளகு, பஞ்சு, சின்னப்பொதி பலசரக்கு, மணிவெட்டி, கொழு இந்த வகைக்கு பொதி க, பணம்-இ

பருத்திப்பொதி, எள்ளுப்பொதி, இந்த வகைக்குப் பொதி க, பணம்-வ

முத்துப்பொதி, பயிலு பொதி, வெத்திலே, நாரத்தங்காய் மற்றவகை"29



வெற்றிலை கிள்ளுதல்–பொன்மேனி, மதுரை மாவட்டம்.

இம்மகமைப் பணவோலைச் சுவடியிலிருந்து முகவை மாவட்டத்து நாடார்கள் கி.பி. 1782-இல் செய்த வியாபாரங் களில் வெற்றிலை, பாக்கு, புகையிலை போன்ற தாம்பூலப் பொருட்கள் முக்கிய இடத்தைப் பெற்றன என அறிகிறோம்.

## வெளிநாட்டார் குறிப்பில் வெற்றிலை

கி.பி. 1225-ல் இருந்த சௌ-ஜு-குவா என்ற சீன நாட்டுப் பயணி சிலன் (சிலான்) தீவை ஆண்ட அரசனைப் பற்றியும், அவன் தரித்த தாம்பூலத்தைப் பற்றியும் சுவை யான தகவலைப் பின்வருமாறு விவரிக்கின்றார்.

'அரசன் வெற்றிலை பாக்குப் போட்டு மென்றபின் துப்புகின்ற தம்பலத்தைப் பிடித்துக் கொள்வதற்காகத் தங்க வச்சிற் படிகத்தை ஏந்திக் கொண்டிருக்கும் பணியாட்கள் நாள் முழுவதும் அவன் அருகில் நின்று கொண்டிருக்கிறார்கள். அரசன் துப்பும் தம்பலத்தில் ப்ளம் மலரும், கருப்பூரமும் இன்னும் பல விலையுயர்ந்த பொருட்களும் இருப்பதால் தம்பலத்தை எடுத்துக் கொள்ளும் உரிமைக்காகப் படிக்கம் பிடிக்கும் பணியாட்கள் மாதம் ஒன்றுக்கு ஒரு 'ஈ' பொன்னை அரசுக் கருவூலத்தில் செலுத்துகின்றார்கள். 30

### மார்க்கபோலோ

கி.பி 13-ஆம் நூற்றாண்டில் பொருநையாறு கடலில் கலக்கும் இடத்தில் உள்ள கெயில் (காயல்) என்ற நகரைக் கண்ட மார்க்கபோலோ அந்நகர் மக்களின் மரபுகளையும் பழக்கங்களையும் கீழ்வருமாறு விவரித்துக் கூறுவார்.

'இந்நகரில் வாழும் மக்கள் மட்டுமின்றி இந்திய நாட்டில் வாழும் மக்கள் அனைவருமே 'தெம்புல்' என்னும் ஒரு வகை இலையை எப்போதும் வாயில் வைத்துக் கொண்டே இருக் கிறார்கள். அது அவர்களுக்கு ஏற்படும் ஏதோ ஒரு வேட்கை யைத் தணிப்பதற்கு உதவுகிறது. ஆனால் அந்தப் பழக்கம்

அவர்களிடம் நிலைத்து நின்று விட்டது. அந்த இலையை அவர்கள் இடையறுது மென்று கொண்டும், அதனுல் ஊறுகின்ற எச்சிலை உமிழ்ந்து கொண்டும் இருக்கிருர்கள்.

அரசரும் பிரபுக்களும் ஏனைய மனிதர்களும் அந்த இலையோடு கருப்பூரம் முதலிய நறுமணப் பொருட்களையும் சுண்ணும்பையும் கலந்து வாயிற் போட்டுக் கொள்கிருர்கள். இந்த பழக்கம் உடம்புக்கு மிகவும் நல்லதென்று அவர்கள் சொல்கிருர்கள்.

ஒருவனை மிகவும் இழிவாக நடத்த வேண்டுமென்று இன்னெருவன் விரும்பினுல் அவன் முகத்தில் தன் வாயில் இருக்கும் இலையையோ அதனுடைய சாற்றையோ துப்பி விடுவான். அவ்வாறு அவமானப் படுத்தப்பட்டவன் நேராக அரசனிடம் ஓடி, தனக்கு நேர்ந்த மானக்கேட்டை எடுத்துச் சொல்லி, அவ்வாறு அவமானப்படுத்தியவனேடு சண்டையிடுவதற்கு அரசனுடைய இசைவைக் கேட்டான். அரசன் தன் இசைவைத் தருவதோடு அவனுக்குத் தேவையான போர்க் கருவிகளையும் தருகிருன். அதாவது ஆளுக்கொரு வாளையும் கேடயத்தையும் தருகிருன். சண்டையைக் காண்பதற்கு மக்கள் திரண்டு விடுகிருர்கள். சண்டை செய்யும் இருவரும் ஒருவறுள் ஒருவன் இறக்கும் வரையில் சண்டையிடுகின்றனர். சண்டையிடும்போது அவர்கள் வாளின் முனையைப் பயன்படுத்தக்கூடாது31.

## இபன் பதூதா

கி.பி. 14-ஆம் நூற்றுண்டில் (கி.பி. 1333-45) வாழ்ந்த இபன் பதூதாவின் பயணக் குறிப்புக்களில் மஹல் தீவில் அளிக்கப்பட்ட வரவேற்பில் வெற்றிலை அளிப்பதும், பன்னீர் தெளிப்பதும் 32 முக்கிய இடம் பெற்றுள்ளதை அறிகிருேம்.

1. Excavation in Lower Kaveri valley Dr. T. V. Mahalingam, p. 53.
2. S.I.I. vol. No. 517 pp. 315-316 Ibid No. 523.
3. T. A. S. vol. V P. I, pp. 126, No. 33, line 65-66.
4. S.I.I. vol. II No. 128.
5. Ibid. vol. III No. 188.
6. T. A. S vol. VII P. I, No. 50, p. 66.
7. Ibid
8. A.R.E. 66-1916.
9. T.A S. vol. IV pp. 94-96 line-4.
10. T. A. S. vol. V. P. I. No. 46 p. 158.
S. I. I. vol. VIII p. 271. No. 534 line 6-7.
11. T. A. S vol. V. P. I, No. 41, p. 145.
12. S.I.I. vol. XIV. No. 16-A.
13. S.I.I. vol. III No. 151.
14. South Indian Polity - Dr. T. V. Mahalingam, p. 423.
15. A.R.E. 39/1924.
16. A.R.E 66/1916.
17. A.R.E. 1936-37, No. 201 & Part II, Para 61.
18. கல்வெட்டுக்களில் புதுவைப்பகுதிகள் - புலவர் சு. குப்புசாமி, பக்கம். 152 (1974).
19. ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு, தொகுதி-6, பக்கம் 4.
20. மதுரை மீனாட்சியம்மன் கோயில் கல்வெட்டு.
21. S I.I. vol. XIV.
22 சென்னை மாநகர் கல்வெட்டுகள் - இரா. நாகசாமி, தொ. எண் 1967/23.
23. Ibid. 1967/81-e.

24. Ibid. 1967/180.
25. கொங்கு - முதல் தொகுதி - பக்கம், 174 (1971).
26. தேனோலை-கொடுமுடி சண்முகம் பிரகதம், பக்கம் *1-16*, சூலை, *1974*.
27. மதுக்கரைப் பட்டயம்-தேனோலை-பக்கம், *6-13*.
28. Ibid p. 8.
29. Ibid p. 13.
30. Ibid p. 15.
31. இராமநாதபுரம் மாவட்டம், சோமலே, பக்கம்-*91*.
32. Chau-Ju-kua; (ed Hirth and Rock hill) I. 13, pp. 72-73. see also.
    Foreign Notices of South India, K. A. Neelakanda Sastri.
    தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டினர் குறிப்புகள், பக்கம், *224*.
33 Travels of Marco Polo, edsyule & Cordier, Book, III, ch. XXXI.
34. தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டினர் குறிப்புகள் பக்கம் 431.

# இலக்கியத்தில் வெற்றிலை

வெற்றிலையை அடகு, அடை, சாகம், பன்னம், பாக்கிலை, பாசிலை, தம்பலம், திரை, திரையல், வெள்ளிலை. வெற்றிலை, வெத்திலை என்று தமிழ் இலக்கியங்கள் விரித்துக் கூறும்.

## திரையல்

அடை என்னும் சொல் இலையைக் குறிக்கும். (அகம்-38 புறம்-266) இவ்விலை பயன்படுத்தும் போது சுருங்குவதாலும், சுருளுவதாலும் 'திரை' என்றும் 'திரையல்' என்றும் அழைக்கப்பட்டது. இன்றும் இப்படி மடித்துக் கொடுத்தலை 'வெற்றிலைச்சுருள்' 'இலைச்சுருள்' என்னும் வழக்கால் அறியலாம். வெற்றிலையோடு பாக்கையும் சேர்த்து கண்ணகி கோவலனுக்கு மடித்துக் கொடுத்ததைச் சிலப்பதிகாரம் கூறும். சிலம்பை ஒட்டி எழுந்த மணிமேகலை காலத்திலும் பின்னர் எழுந்த சிந்தாமணி காலத்திலும் வெற்றிலை 'திரையல்' என்று அழைக்கப்பட்டதை அறிகிறோம்.

'அம்மன் திரையலோ டடைக்கா யீத்த' (சிலப்-16, 55)

'பாசிலைத் திரையலும் பளிதமும் படைத்து'
(மணி 28, 243)

ஈழநாட்டில் மணமகளை அழைக்கும் பொழுது வெற்றிலைச் சுருள் கொடுத்து விமரிசையாக அழைத்து வருதல் வழக்கம். இதனை,

''மச்சான்மார் எல்லோரும்
மங்கையரைச் சூழ்ந்துவர
வெற்றிலைச் சுருள்கொடுத்து

விமரிசை யோடழைத்து

கொண்டு புறப்படுங்கோ

கோலவரி பெண்பிள்ளையை

என்ற ஈழத்து நாட்டுப்பாடல் கூறும்1.

பசுமை+இலை=பாசிலை, இது பச்சியிலை என்றும் வெற்றிலை என்றும் பொருட்படும். இலை பசுமையாயிருந்ததால் இது பாசிலை என்று அழைக்கப்பட்டது. இதனையே மணிமேகலை 'பாசிலைத் திரையலும் பளிதமும் படைத்து' எனக் கூறும். இப்பாடல் அக்காலத்தில் வெற்றிலை பாக்கும் கற்பூரமும் வைத்துப் படைக்கும் வழக்கத்தைத் தெரிவிக்கிறது. திருத்தக்கதேவரின் சீவகசிந்தாமணியிலும் 'பாசிலை சுருட்டி' எனக் குறிக்கப்படுகிறது. பாசுரமும் 'பாசிலை நாணற் படுத்துப் பரிதி வைத்து' (திவ். தாய்ச்: 6, 7) எனக் குறிக்கிறது.

## பாக்கிலை

வெற்றிலையைப் பாக்கோடு சேர்த்துத் தின்பதால் இதற்குப் பாக்கிலை என்ற பெயரும் உண்டு. எனவே பாக்கிலை என்னும் சொல் பொதுவாகப் பாக்கு வெற்றிலையைக் குறிக்கும்2.

## வெள்ளிலை

வெள்ளிலை என்ற சொல்லும் வெற்றிலையையே குறிக்கப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இவ்வெள்ளிலை என்ற சொல் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழகத்தில் வழக்கில் இருந்துவந்துள்ளது. இதனையே இலக்கியங்கள்,

'வெள்ளிலை தம்பல் கண்டார்' (கம்பன்)

'வெள்ளிலை அடைக்காய் விரும்பி' (தாயு-சச்சி. 11)

'விரைப்பாகு வெள்ளிலை சுண்ணும்பினொடு'
(வாயு சங்கிதை, கிரியா-23)

என விரித்துக் கூறும். கல்வெட்டுகளிலும் வெள்ளிலையமுது வெள்ளிலைப் பற்று என்ற குறிப்புகள் காணப்படுகின்றன. வெள்ளிலை அமுது என்பது தாம்பூலநிவேதனம் என்பதைக் குறிக்கும்.

## புறநானூற்றில் பாசடகு

கணவன் போரில் இறந்த பின்பு மனைவியர் பச்சையிலை முதலியவற்றைத் தின்னது கைம்மை நோன்பு காத்தல் பண்டைய வழக்கம். இவ்வழக்கைப் புறநானூற்றுப் பாடல் ஒன்று சித்தரிக்கிறது. சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும், சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் போர்ப்புறத்திலே தமக்குள் போரிட்டு வீழ்ந்தனர். அவர்களது குடைகள் தாழ்ந்தன. முரசுகள் வீழ்ந்தன. பாசறைகள் ஒருவரும் எஞ்சி இல்லாதவாறு அழிந்தன. அவர் மனைவியர், பச்சிலையும் தின்னது நீரும் மூழ்காது இறந்து கிடக்கும் தத்தம் கணவரின் மார்பைக் கட்டியவாறே களத்தில் கிடந்த காட்சியைக் கழாத்தலையார் சித்திரிக்கின்றார்.

இங்கு 'பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்' என்ற வரியில் பாசடகு என்பதற்குப் 'பச்சையிலை (வேளைக்கீரை) முதலாமென்பது' உரையாசிரியர் கூற்று. பாசடகு என்றால் வெற்றிலை என்றும் பொருள் கொள்வர் வரலாற்றுப் பேராசிரியர் திரு கே. ஏ. நீலகண்டசாஸ்திரியார் அவர்கள் இவ் வழக்கத்தைக் கூறும்போது கணவன் போரில் இறந்த பின்பு மனைவியர் வெற்றிலை தின்னர் குளிர்ந்த நீரில் மூழ்கார் எனப் பொருள் கொண்டுள்ளார். வெற்றிலை உணர்ச்சிகளை எழுப்ப வல்லது என்ற மருத்துவ இலக்கியங்களின் கூற்றுகளும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

## தம்பலம்

'தம்பலம்'—'தாம்பூலம்' என்னும் வடமொழிச் சொல்லின் திரிபு. இச்சொல் வெற்றிலையைக் குறிக்கும். தாம்பூலம் என்ற


சொல் கி. மு. 6-ஆம் நூற்றுண்டிலே இந்தியாவில் வழக்கத்தில் இருந்ததாக முன்னர் கண்டோம். சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை நூலான கலித்தொகை தாம்பலம் தின்பதைப் பற்றிக் குறிக்கக் காண்கிறோம். (கலி. 65 : 13) இதனால் சங்ககாலத்தில் தம்பலம் அளித்து உபசரிப்பது வழக்கம் என்பதை அறிகிறோம்.

கம்பநாடார் 'வெள்ளிலை தம்பல் கண்டார்' எனக் குறித்துச் செல்வர். கி.பி. 9-ஆம் நூற்றுண்டு இலக்கியமான திருக்கோவையாரும் 'தில்லை நல்லார் பொது தம்பலங் கொணர்ந்தோ' எனக்குறிக்கிறது. தம்பலம் என்ற சொல் தமிழில் வழக்குச் சொல்லிலும் பரவியது. நிச்சயதாம்பூலம், தாம்பூல பத்தியம், தாம்பூல நிவேதனம், தாம்பூலத் தட்டு, தாம்பூலம் பரிமாறல், தாம்பூலம்தரித்தல், தாம்பூலஎச்சில், என்ற சொற்கள் வழக்கத்தில் உள்ளதைக் காணலாம். தெலுங்கிலும் 'தம்பலப்பாக்கு' என வெற்றிலை பாக்கைக் குறிப்பதுண்டு.

## வெற்றிலை

வெற்றிலை என அழைக்கப்படும் இவ்விலையைச் (வெறுமை இலை) சமைப்பதற்குப் பயன்படாத இலை என்றும் பொருள் கொள்வர். முன்னர் கண்ட வெள்ளிலை என்ற சொல்லை விட வெற்றிலை, வெத்திலை என்ற சொல்லே பெரும்பாலும் வழக்கில் இருப்பதைக் காண்கிறோம். ஆறும் நூற்றுண்டுக்கு முன்னர் வெற்றிலை என்ற பெயர் இலக்கிய வழக்கிலே காணப்படவில்லை.

சங்க இலக்கியங்களில் இவ்விலை 'தம்பலம்' 'திரையல்' 'அடை' 'நீடுகொடி இலை,' எனக் குறிக்கப்படுகிறதே தவிர வெற்றிலை எனக் குறிக்கப்படவில்லை. ஆனால் உரையாசிரியர்கள் இடம் கருதி வெற்றிலை என்றே பொருள் கொள்கின்றனர்.



வெற்றிலைக் கொடியை அகத்தியில் எடுத்துக் கட்டுதல்,

சங்க காலத்தில் மதுரை, புகார், வஞ்சி போன்ற நகரங்களின் வீதிகளில் இருந்த நாளங்காடி அல்லங்காடி ஆகிய வற்றிலும் இவ்விலை விற்பனை ஆகியிருக்க வேண்டும். இதனை இலக்கிய ஆதாரங்களும் உறுதிப்படுத்துகின்றன. பண்டு மதுரை மாநகர் வீதியின் அழகைப் படம் பிடித்துக் காட்டிய மாங்குடி மருதனார் அவ்வீதிகளில் வெற்றிலை பாக்கு விற்போர் இருந்ததையும் குறிப்பிடுகின்றார்.

'நீடு கொடி இலையினர் கோடு சுடு நூற்றினர்'
(—மதுரைக்காஞ்சி. 400-401)

எனவே பண்டு மதுரைப்புறத்தே வெற்றிலையைப் பயிரிட்டு விற்பனைக்குக் கொண்டு வந்தனர். வெற்றிலை போடும் பழக்கத்தையுடைய மக்களும் வாங்கிப் பயன்படுத்தினர். வெற்றிலை போடும் வழக்கத்தை மேற்கொள்ளும் மக்கள் சங்க காலத்திலேயே தமிழகத்தில் இருந்துவந்துள்ளனர் என அறிகிறோம். இவ்வெற்றிலையின் பொதுத்தன்மையைக் கருதியே மாங்குடி மருதனார் 'நீடு கொடி இலை' என்றார். கி பி. 6-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் எழுந்த திவ்யப் பிரபந்தங்களிலும் 'வெற்றிலை' குறிக்கப்படுவது. சிறப்புடையதாகும்.

'உண்ணுஞ்சோறும், பருகும் நீரும்
தின்னும் வெற்றிலையும்'
'(நா. திவ்ய. திருவாய் 6, 7)

கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின் பல பகுதியில் இருந்து வந்த சமணர்களின் அன்றாட வாழ்விலும் இவ்வெற்றிலையின் சிறப்பான பங்கைக் காண்கிறோம். தம் கைகளில் 'மருதோன்றி' கொண்டு சாயம் பூசிக்கொள்ளுதலும் வெற்றிலை பாக்கும் சுக்கும் தின்னுதலும் சமணத் துறவியரின் வழக்கம் என்பதைத் தேவாரம் கூறும்7.

சுமார் கி.பி. 9 10-ஆம் நூற்றாண்டில் எழுந்த சீவக சிந்தாமணி தாம்பூல வழக்கைப் பற்றி விரித்துக் கூறுகிறது.

இந்நூலில் வெற்றிலையைப் பற்றி விளக்கமாக அறிந்து கொள்ள முடிகிறது. இவ்விலை 'பாசிலை' என்றும் (சீ. பா. 1987), 'பசுந்திரை' என்றும் (சீ. பா 197), 'மெல்லிலை' என்றும் (சீ பா. 815) பல்வேறு பெயர்களில் குறிக்கப்படுகிறது. மேலும் இவ்வெற்றிலை பயிரிடும் தோட்டம் 'மெல்லிலைக்காவு' (சீ. பா. 826) என்று குறிக்கப்படுகிறது.8

வெற்றிலை வைக்கும் பெட்டி வெற்றிலைப் படலிகை என்று கூறப்படுவதை அறிகிறோம்9 வெற்றிலைத்தட்டு 'வெற்றிலைச் செப்பு' எனவும் குறிக்கப்படுகிறது. இச்செப்புத்தட்டு 'மணிச்செப்பு' என்று சிறப்பிக்கப்படுகிறது. இதனை

> சீந்தா நின்ற தீமுக வேலான் மணிச்செப்பின்
> ஈந்தான்......................(சீ. பா. 1055 : 1-2)
> கப்புரம் பசுந்திரை கதிர்செய்
> செப்பொடு சிலதிய ரேந்த............(சீ. பா 197 : 1-2)

எனச் சீவக சிந்தாமணி கூறும். மற்றும் விருந்தினருக்கு வெற்றிலையைச் செப்பிலே வைத்துக் கொடுத்தலையும்,10 பச்சைக்கற்பூரம், வெற்றிலை ஆகியவற்றைச் சுருட்டிப் பெண்கள் ஏந்தி வருதலும்,11 பாக்கையும் வெற்றிலையையும் பறித்துக் கொண்டு வந்து மொய்ம்பார்க்குக் கொடுத்து அவரணிந்த சணபகமாலையைப் பெறுதலும்12 போன்ற பண்டைய வழக்கங்களை விளக்கிக் கூறுகிறது.

## வெற்றிலையும் கவிராயரும்

திருநெல்வேலி மாவட்டத்தில் நெற்கட்டுஞ் செவ்வலுக்கும் தலைவன்கோட்டைக்கும் இடையிலுள்ள ஊர் சாத்தூர். இங்கு முன்பு வெற்றிலை மிகுதியாக பயிராகிய போதிலும், இவ்வூர் வழியாகச் சென்ற ஆண்டான் கவிராயருக்கு வெற்றிலை கொடுக்கவில்லையாம். அதனால் மனம் நொந்த புலவர்

பட்டக்குறிச்சி பலபேர் இருக்குமிடம்

இட்ட கொடிக்கால் இலை கருக

என்று அறம் பாடினர். இதனால் இவ்வூரில் வெற்றிலை கொடிக்கால் பட்டுவிட்டது என்று கூறப்படுகிறது.

## மருத்துவ இலக்கியங்களில்

கருப்பு வெற்றிலை என்ற கம்மாறு வெற்றிலையே சித்த வைத்தியத்திற்கு மிகுந்த அளவில் பயன்படுத்தப்படுகிறது. மருத்துவ இலக்கியங்களில் இவை பொதுவான பெயர்களிலும் மருத்துவ பரிபாஷைகளிலும் குறிக்கப்படுகின்றன. மருத்துவ இலக்கியங்களில் 'காரவெற்றிலை' என்றும், 'கம்மாறு' வெற்றிலை என்றும் பொதுவாகக் குறிக்கப்படுகின்றன. மருத்துவ பரிபாஷைகளில் 'நீலகண்ட இலை' என்றும் 'மடக் குருவி' என்றும் நாகவல்லி13, என்றும் வெற்றிலை குறிக்கப் படுகிறது. இவ்வெற்றிலையின் மருத்துவக் குணங்களைப் பற்றிப் பின்னர் காண்போம்.

## தற்கால இலக்கியத்தில்

தற்கால இயற்றமிழ்க் கவிஞர்களில் பாரதியும், பாரதி தாசனும் குறிப்பிடத்தக்கவர்கள். பண்டைய பண்பாட்டுக் கூறுகளையும், பந்நெடுங்காலமாகப் பழக்கத்தில் வந்த மரபு களையும் அவர்கள் பாடல்களில் காணலாம். நாட்டு மக்களின் ஒற்றுமையை விளக்க வந்த பாரதி,

கங்கை நதிப்புரத்து கோதுமைப்பண்டம்

காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்வோம்14

கங்கை நதிப்புரத்தில் விளையும் கோதுமைக்குக் காவிரி வெற்றிலையை மாறுகொள்வோம் என்ற பாரதியின் பாடல் 20-ஆம் நூற்றாண்டின் ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும் விளக்குவதோடல்லாமல் வளங்கொழித்த தமிழகத்தின்

வெற்றிலே விளைவை விளக்கிக் கூறும் பகுதியாகவும் அமைகிறது. அடுத்து விருந்தோம்பிய பின் விருந்தினருக்கு வெற்றிலே கொடுத்து உபசரிக்கும் பண்டை வழக்கத்தை 20-ஆம் நூற்றாண்டு இலக்கியத்திலும் பதிய வைத்துப் புதுப்பிக்கும் வகையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதைகள் சுவைபட அமைந்துள்ளதைக் காணலாம்.

தூய சருகிலுறு
தொன்னைபல வைத்திடுவாய்
ஆயுணவு தீர்ந்தே
அவர் எழுமுன்–தாயே

அவர்கைக்கு நீர் ஏந்தி
நெய்ப்பசைய கற்ற
உவர்க்கட்டி தன்னை
உதவு துவைத்ததுகில்

ஈரம் துடைக்க என
ஈந்து மலர்ச் சந்தனமும்
ஒரிடத்தே நல்கியே
ஒள் இலைக்காய்–சேரவைத்து
மேல்விசிறி வீசவிப்பாய்
மெல்லியலே! என்றுரைத்தாள்15

## இலக்கணத்தில்

உரையாசிரியர் யாவரும் சினையாகு பெயருக்கு 'வெற்றிலை நட்டான், என்ற எடுத்துக் காட்டையே எடுத்தாள்வர். இலக்கண ஆசிரியர்கள் உம்மைத் தொகைக்கு 'வெற்றிலையும் பாக்கும்' என்று கூறுவர்.

1. வட இலங்கையர் போற்றும் நாட்டார் பாடல்கள்– மு. இராமலிங்கம். பக். 56
2. தமிழ் அகராதி. 2578.
3. S.I.I. vol. II. No. 128.
4. Ibid. vol. III. No. 188.
5. புறநானூறு மூலமும், பழைய உரையும் – உ. வே. சாமிநாதய்யர். பக். 151. பதிப்பு 1971.
6. The Cholas – K. A. Nilakanda Sastri. vol. I. 1935. pp. 90–98.
7. தேவா. பதி, 6. பாடல் 10. வரி. 1–4.
8. சீவகசிந்தாமணி. பா. 826.
9. ,, பா. 2707.
10. ,, பா. 1055.
11. ,, பா. 197.
12. ,, பா. 132.
13. 'மாற்றுரைப் பொருள் விளக்க அகராதி' – இரா. விஜயன் – நந்தி. பக். 21. நவம்பர் 1970.
14. பாரதியார் கவிதைகள்.
15. குடும்ப விளக்கு – பாரதிதாசன்.

# நாட்டுப்புற இலக்கியத்தில் வெற்றிலை

தாம்பூலம் தரிக்கும் வழக்கத்தைக் கிராமங்களில்தான் அதிகமாகக் காணமுடிகிறது. காரணம் கிராமிய மக்கள் ஏர் உழுதல், ஏற்றம் இறைத்தல், நாற்று நடுதல், களை எடுத்தல், அறுவடை செய்தல், சூடுபிடித்தல், நெல்குத்தல் முதலிய விவசாயப் பணிகளில் அதிகமாக ஈடுபடுகின்றனர். அப்பணி களில் இடைவிடாது ஈடுபடும்போது ஏற்படும் சோர்வு நீங்க வும், உற்சாகம் தோன்றவும் வெற்றிலை பாக்குப் போடும் வழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். வெற்றிலைப்பாக்குடன் புகையிலையும் சேர்த்து போடுவதால் பசி நீங்குகிறது. சுருங் கக்கூறின் கிராமிய மக்கள் அறிந்தோ அறியாமலோ தாம்பூல பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டனர் என்றே கூறலாம்.

தாம்பூல வழக்கு எந்த அளவிற்கு கிராமிய வாழ்க்கையில் இரண்டறக் கலந்துவிட்டது என்பதை அவர்கள் பாடும் நாட் டுப் பாடல்கள் மூலம் அறியலாம். கல்லா மக்களின் கவிதை யாகவும், ஏடறியா இலக்கியமாகவும், ஏழைமக்களின் எண் ணங்களின் எதிரொலியாகவும், உழைக்கும் மக்களின் உரி மைக் குரலாகவும் ஏர்ப்பாட்டு, ஏற்றப்பாட்டு, நாற்று நடுகைப் பாட்டு, அறுவடைப் பாட்டு. தெம்மாங்கு முதலிய பாடல்களிலும் கூட இத்தாம்பூலம் சிறப்பிடம் பெறுவதைக் காணலாம்.

இத்தாம்பூலம் பற்றிய கருப்பொருள்கள் குழந்தை இலக் கியங்களில் அரும்பி, தொழிலாளிகளின் பாடல்களில் மலர்ந்து, தெம்மாங்குப் பாடல்களில் மணம்வீசுவதைக் காணலாம். எடுத்துக்காட்டாகச் சிலவற்றை நோக்குவோம்.

தாய் குழந்தையைத் தாலாட்டுகிறாள். தாலாட்டில் தாய் மாமன் சிறப்பும், குலப்பெருமையும் கூறப்பெறுகின்றன.

அத்தாலாட்டில் தாய்மாமனின் செல்வச்சிறப்பும், மாமன்மார் கொண்டுவரும் சீர்வரிசையும் இன்பத்தமிழோசையாக எழுகிறது. சாதிக்களிப்பாக்கும், சங்கு வெள்ளைச் சுண்ணும்பும், இளங்கொடிக்கால் வெற்றிலையும்1 கொண்டுவரும் மாமனைப் பற்றிய முழு உருவம் குழந்தையின் மனதில் பதிகிறது. இவ்வாறு இன்பத்தமிழ் மொழியின் இனிய கீதங்கள் இளைய நெஞ்சங்களில பதிகின்றன. இசையின் நாதத்தில் குழந்தை மெய்மறந்து உறங்குகிறது.

## குழந்தைப் பாடல்களில்

அடுத்த நிலையில் குழந்தை தவழ்ந்து, நிலாக்காட்டி, சிற்றில் சிதைத்து விளையாடத் தொடங்குகிறது. வேடிக்கைப் பாடல்கள் மலர்கின்றன. பாடலுக்குக் கருப்பொருள் தேடிக் குழந்தை அலைவதில்லை. தாயின் மடியிலே கேட்ட தாலாட்டுப் பாடலும், அன்றாடம் கண்ணால் காணும் சாட்சிகளுமே கருப்பொருளாக உருவெடுக்கின்றன அவற்றில் ஒன்று அய்யாத்துரை கலியாணம். அக்கல்யாணம் வேடிக்கைப் பாடலாகத் தொடங்குகிறது. வீட்டுச் சாப்பாடும், கோயில் மேளமும், கடை வெற்றிலை பாக்கும், சூளைச் சுண்ணும்பும் சுவையாக அவர்கள் வாய்மொழியில் மலர்கின்றன. பாடலை நோக்குவோம் :

அய்யாத்துரைக்குக் கலியாணம்
அவர் அவர் வீட்டிலே சாப்பாடு !
கொட்டு மேளம் கோயிலிலே
வெற்றிலை பாக்கு கடையிலே
சுண்ணும்புச் சூளையிலே! 2

இவ்வாறு அய்யாத்துரையின் கல்யாணத்தைச் சிக்கனமாக முடித்துவிடுகின்றனர் சிறு குழந்தைகள்.

இவ்வாறு சிறு குழந்தைகள் விளையாடும் சில்லாங்குச்சு, கிளித்தட்டு, தட்டாங்கல், பாண்டி, பண்ணுங்குழி, கழற்சி

கண்ணும்பொத்தி ஆகிய விளையாட்டுகளிலும் வேடிக்கைப் பாடல்கள் தோன்றுகின்றன.3 அங்கெல்லாம் கூட வெற்றிலை யின் சிறப்பும் பெருமையும் கூறப் பெறுகின்றன.

எடுத்துக்காட்டாகக் குழந்தைகள் மணலைக் கரை கட்டி அதில் திரியை ஒளித்து வைத்துக் கொண்டு விளையாடும் பழக்கம் உண்டு, அவ்விளையாட்டுகள் தப்புக்குச்சு, திரித்திரி, குச்சி விளையாட்டு என்று அழைக்கப்படும். அவ்விளையாட்டுப் பாடலில்,

1. மாது மாது மன்னவன் தம்பி
கோது கோது கொழுந்து வெத்திலே
வெள்ளைக்காரன் சொல்லிக்கொடுத்தான்
சொல்லாதே சொல்லாதே
தட்டிக்கோ தாய்ச்சிக்கோ
தட்டி வெத்திலே போட்டுக்கோ
போட்ட இடத்திலே துப்பிக்கோ4

2. வெற்றிலே நாக்கு
சித்திரைப்போக்கு
சிவனோட வாக்கு5

3. வாட வெத்திலே வதங்க வெத்திலே
வாயிக்கு நல்லால்லே
நேத்து வைச்ச குங்கும பொட்டு
நெத்திக்கு நல்லால்லே6

சிறுமியர் சேர்ந்து விளையாடும் கழற்சிப் பாட்டிலும் வெற்றிலைத் தோட்டம் இடம் பெறுவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக,

"பொரிக்குள்ளே ராஜா
பொன்னுகேட்க போனு

வெத்திலை தோட்டத்துக்கு
விளையாட போச்சா
சூதாட வாடியம்மா
காசிக்கு போகலாம்7''

தைப்பிறந்த முதல் நாள் பொங்கல். மறுநாள் மாட்டுப் பொங்கல். மூன்றும் நாள் பூப்பொங்கல். பூப்பொங்கலன்று பருவமடைந்த மங்கையரும் சிறுமிகளும் விநாயகர் கோயிலில் கூடிக் கும்மியடிப்பார்கள். மார்கழி மாதத்திலே நாள் தோறும் வாசலில் வழிபட்ட பிள்ளையார்களை ஆற்றிலோ குளத்திலோ போட்டுப் புறப்படுவார்கள். புறப்படும்போது பாடும் பாடல்கள் இனிமையானவை.

சேலை அரைப்பணமாம்
சித்தாடை கால்பணமாம்
சேலை குறைச்சலென்று
சிணுங்குருளாம் ஓலையக்கா
..........................................
மேற்படியைத் தட்டிவிட்டு
வெத்திலை காம்பைக் கிள்ளிவிட்டு
மேனாட்டு ஓலையக்கா!
மேற்கே குடிபோருள்8

இவ்வாறு குழந்தை இலக்கியங்களில் இளங்கொடிக்கால் வெற்றிலை, கொழுந்து வெற்றிலை, வெற்றிலைத் தோட்டம், வெற்றிலைக் காம்பு முதலிய தாம்பூலப்பொருட்கள் இடம் பெறுவதைக் காணலாம்.

## பழமொழியில் வெற்றிலை

தமிழகத்தில் வழங்கும் பழமொழிகளிலும் வெற்றிலையின் பங்கைக் காணமுடிகிறது. ஐம்பெருங்காப்பியங்களில்

ஒன்றுன சீவகசிந்தாமணியில் வெற்றிலையைப் பற்றிய பழமொழி ஒன்று குறிக்கப்படுகிறது.

'வெற்றிலே விடினும் வேலாம்' (சீவக-815)

விருந்து உபசரித்தலில் தாம்பூலத்திற்குச் சிறப்பான பங்குண்டு. தமிழகத்தில் வீடு தேடி வந்த விருந்தினருக்கு உண்டி கொடுத்து உபசரிப்பதும் வெற்றிலே பாக்கு அளித்து உபசரிப்பதும் வழக்கம். இவ்வாறு வெற்றிலேயில்லா விருந்து விருந்தாகாது எனக் குறிக்கிறது பழமொழி.

1. 'வெற்றிலேயில்லா விருந்தில்லே'
2. 'வெற்றிலேயில்லா விருந்தும்,
சீரகமில்லா ரசமும்,
சீரில்லா பொம்பளேயும்'

குடும்பங்களில் சிறப்பாகக் கருதப்படுவதில்லே என்பதைப் பழமொழியால் அறிகிறோம்.

'தம்புடி வெற்றிலே நிச்சய தாம்பூலம்
ஒருதுட்டு வெற்றிலேக் கல்யாணம்'9

என்ற பழமொழி பல மாவட்டங்களில் வழக்கில் உள்ளது. இப்பழமொழியைக் கொண்டு அக்காலப் பொருளாதார நிலேயை ஒருவாறு அறியமுடிகிறது. ஒரு தம்படி பணத்தில் வெற்றிலே வாங்கி நிச்சய தாம்பூலத்தையும், ஒரு துட்டு பணத்தில் கல்யாணத்தையும், நிறைவாக முடிக்கும் அளவில் பண்டைய பொருளாதாரம் அமைந்திருந்தது என்பதை அறிகிறோம். ஆனுல் அடுத்து வரும் பழமொழி இவ்வெற்றிலேயின் விலே நிரந்திரமில்லாதது; இன்று ஒரு விலே விற்கிறது; நாளே ஒரு விலே விற்கும் என்பதனே எடுத்துக் காட்டுகிறது.

'வெத்திலே விலேயைச் சித்திரத்தில் எழுதாதே'

திருமணத்திற்கு முன்பு வெற்றிலை பாக்கு வைத்து, உறவினரை அழைப்பது மரபு. இதையொட்டி எழுந்த பழமொழி

'விடிந்தால் கல்யாணம் பிடி வெற்றிலைபாக்கு'

என்பதாகும். இறந்தவர் கையில் வெற்றிலை பாக்கு வைக்கும் வழக்கத்தைக் கிராமங்களில் இன்றும் காணலாம். இவ் வழக்கத்தை

'செத்தவன் கையில் கொடுத்த வெத்திலை பாக்கு போல' என்ற பழமொழி உறுதிப்படுத்தும்.

## விடுகதையில் வெற்றிலை

தமிழ்நாட்டுப் பாமர மக்களின் பொழுதுபோக்கு விளையாட்டுக்களில் விடுகதையும் ஒன்று. இதைக் குழந்தை இலக்கியத்தின் ஒரு கூறாகக் கருதுவர். கிராம மக்களின் அன்றாட எளிய வாழ்வில் வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு தரிக்கும் வழக்கம் எந்த அளவுக்கு தோய்ந்திருந்தது என்பதைக் கீழ்க்கண்ட விடுகதைகளில் காணலாம்.

1. விடுகதை : மலையிலே மலைச்சரிவிலே
மயங்கி நிக்கிற பெண்ணே உன்னைக்
கிள்ளாட்டா முள்ளாட்டா
கிளிக் கூண்டிலே போட்டு அடைக்கட்டா 10

விடை : வெற்றிலை

2. விடுகதை : பால்பால் டாக்டர்
பச்சை பச்சை டாக்டர்
குதிரை வால் டாக்டர்
குண்டுச் சட்டி டாக்டர் 11 – அது என்ன?

விடை : வெற்றிலை, பாக்கு, புகையிலை, சுண்ணாம்பு.

3. விடுகதை : முத்துப்பல் கோட்டைக்குள்ளே
மூணுபேர் போறாங்க
யாரும் திரும்பல
இரத்தமா வருது 12 - அது என்ன?

விடை : வெற்றிலே. பாக்கு, சுண்ணாம்பு

4. விடுகதை : ஆனேக்காதுத் தண்டி
ஆயிரந்தோசை தின்றாலும்
பச்சிலே பசியடங்காது – அது என்ன?

விடை : வெற்றிலே

5. விடுகதை : ஊசி மூக்கன் உள்ளங்கைத் தட்டையன்
ஊரெங்கும் செல்லபிள்ளே – அது என்ன?

விடை : வெற்றிலே

6, விடுகதை : காசை கொடுத்துக் கடையில் வாங்கினாள் கள்ளி
பையிலே போட்டு பவிசாக வைத்திருந்தாள் பள்ளி
வாயில் போட்டு வர்ணம் காய்ச்சினாள் வள்ளி
பச்சிலேத் தோப்புக்குள்ளே பார்த்தால் தெரியும் - அது என்ன?

விடை : வெற்றிலே

7. விடுகதை : கிள்ளுவதற்கும் அணைப்பதற்கும்
கட்டுவதற்கும் கட்டழகி
பொறுத்திருப்பாள் தாசியுமல்ல
இஷ்டப்பட்டு காசு கொடுத்தால்
வருவாள் தாசியுமல்ல - அவள் யார்?

விடை : வெற்றிலே

8. விடுகதை : கூரத்துச் செம்பைப் புரு
கூட்டி வைக்கும் பச்சைப் புரு
நான் வளர்க்கும் வெள்ளைப் புரு
எல்லாம் ஒரே கூட்டுப் புரு - அது என்ன?

விடை : பாக்கு, வெற்றிலை, சுண்ணும்பு

9. விடுகதை : சட்டமுடன் ஒரு கதையைச் சாற்று கின்றேன்
சாமியதை நீயுவந்து சதுராய் கேளு
பட்டணத்துத் தேவியவள் சொகுசுக்காரி
பழிகாரி இளங்கொடியாள் பாரின் மீது
கட்டுதற்கும் கிள்ளுதற்கும் அணைப்ப தற்கும்
கட்டழகி பொறுத்திருப்பாள் காசுக் கென்றால்
இட்டமுடனே வருவாள் தாசியுமல்ல
இனிப்புடனே இக்கதையை இயம்புவாயே

விடை : வெற்றிலை

10. விடுகதை : திண்டுக்கல்லை இரண்டாய் வெட்டி, திருச்சிராப்பள்ளியை மூன்றாய் மடித்து, வெள்ளைக்காரனை உள்ளே விட்டு விசையை முடுக்கினால் ரத்தம் வரும் –அது என்ன?

விடை : வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு

11. விடுகதை : தோட்டத்தலங்காரி, துரைமகள் சிங்காரி, கையிலடங்குவாள், களிப்பை உண்டாக்கு வாள், தேட்டமுடனிக் கதையைச் சொல் வோர் தம்மை தேவருக்கு மேலாகச் செப்ப லாமே–அது என்ன?

விடை : வெற்றிலை.

12. விடுகதை : பச்சை நிறத்திலே பக்கத்தூரு மாடு ஒன்னு; வெள்ள நிறத்திலே வெள்ளிச் சந்தை மாடு ஒன்னு; செவந்த நிறத்திலே செட்டிக்கடை மாடு ஒன்னு; மூனு மாடு ஒன்னு சேர்ந்து ஒரு செவப்புக் கன்னு போட்டுது – அது என்ன?

விடை : வெற்றிலே, பாக்கு, சுண்ணும்பு.

13. விடுகதை : பன்னிரண்டு வருஷ வேளாண்மை ஒன்று, ஆறு மாச வேளாண்மை ஒன்று, மூன்று மாச வேளாண்மை ஒன்று, அன்றே நட்டு, அன்றே அறுக்கும் வேளாண்மை ஒன்று, எல்லாம் ஒரு கலத்திலே அடிபடவேண் டும்–அது என்ன?

விடை : பாக்கு, வெற்றிலே, புகையிலே, சுண்ணும்பு.

14. விடுகதை : போகும் வழியில் பெருச்சாளி, வங்கில் கை விடுகிருன்–அது என்ன?

விடை : வெற்றிலேப் பை.

15. விடுகதை : மலய மலய காட்டிலே, மலர்ந்திருக்கின்ற பொம்பளே, கிள்ளட்டுமா? கிழிக்கட்டுமா? கிளிக்கூட்டில் அடைக்கட்டுமா.–அதென்ன?

விடை : வெற்றிலே.

16. விடுகதை : முத்துவீரனைப் பிடியுங்கள்; முதுகு நரம் பைக் கிழியுங்கள்; பச்சை வெண்ணெயைத் தடவுங்கள்; பாங்காய் வீட்டை அடை யுங்கள்–அது என்ன?

விடை : வெற்றிலே, பாக்கு, சுண்ணும்பு.

இவ்விடுகதைகள் கிராம மக்கள் தாம்பூலப் பொருட்களைப் பற்றிக் கொண்டுள்ள அறிவையும், அவற்றைப் பயிரிடும் விவசாய அறிவியலையும் எடுத்துக் காட்டும்.

## கதைகளில் வெற்றிலை

பண்டைக் காலத்தில் நாடாண்ட அரசர்களுக்கு வெற்றிலை மடித்துக் கொடுப்பவனுக்கு அடப்பைக்காரன் என்று பெயர். இவ்வடப்பைக்காரர்களுக்கும் அரசர்களுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு பற்றி இரு 'வரலாற்றுக் கதைகள் நிலவுகின்றன.

ஒன்று, கவிச்சக்கரவர்த்தி கம்பன் சோழ மன்னன் குலோத்துங்கனிடம் அடப்பைக்காரனாகப் பணிபுரிந்தது பற்றியது.

மற்றொன்று, விஜயநகரச் சக்கரவர்த்தி கிருஷ்ணதேவ ராயரிடம், மதுரையில் நாயக்க வம்சத்தினை நிறுவிய விஸ்வநாத நாயக்கன் அடப்பைக் காரனாக பணிபுரிந்தது பற்றியதாகும்.

## ராதையைத் தாம்பூலமாக்கிய கதை

ஐவந்தரை என்பது ஒரு அழகிய நோன்பு. அது தமிழகத்தில் தீபாவளிக்கு மறுநாள் அமாவாசையன்று கோலாகலமாகக் கொண்டாடப்படும். விழாக்காலம் முழுவதும் கோலாட்டமும் கும்மியும் ஊரெங்கும் கேட்கலாம். அன்று பெண் குழந்தைகள் களிமண்ணால் பசுவும் கன்றும் பிடித்து வைப்பார்கள். எதிரே வட்டமாக நின்று வளைகுலுங்கச் சிற்றடி பெயர்த்துக் கும்மியடிப்பார்கள்.

நாடும் நகரமும் செழிக்க மக்கள் ஒழிவின்றி வாழ, ஊர்க் குழந்தைகள் மேற்கொள்ளும் பசு நோன்பினையொட்டி ஒரு புராணக்கதையும் வழங்குகிறது.

முன்பு கோகுலத்தில் கண்ணபிரான் ராதை என்னும் கோபியிடம் அதிக அன்புகாட்டி வருகிறான், மற்ற கோபியர் பொறாமையுற்று அவளைத் துன்புறுத்துகின்றனர். கண்ணன் ராதையைத் தாம்பூலமாக்கி வாயில் தரித்துக் கொள்கிறான். கோபியர்கள் கண்ணனை விடுவதில்லை. எல்லோரும் ஒன்று சேர்ந்து சினம் பொங்க அவனிடம் சண்டை பிடிக்கிறார்கள். கண்ணன் தன் வாயிலிருந்த தாம்பூலத்தை யமுனையில் உமிழ்ந்துவிட்டுத் தானும் நீரில் மூழ்கி விடுகிறான். கண்ணனை காணாத கோபியர் கதறியழுகிறார்கள். அப்போது அசரீரி யொன்று கேட்கிறது. கண்ணன் அன்புக்குகந்த பசுவையும் கன்றையும் கோபியர் ஒரு மண்டலம் தொழுது பாராட்டினால் கண்ணன் மீண்டும் வருவான் என்ற சேதி கிடைக்கிறது. கோபியரும் யமுனை மண்ணைத் திரட்டிப் பசுவையும் கன்றையும் பிடித்து வைத்துப் பூசிக்கிறார்கள். மனம் இருந்திய கோபியர் மகிழக் கண்ணன் அவர்களுக்கு காட்சியளிக்கிறான் 14 இந்த வரலாறே கோலாட்ட ஐவந்தரையாக உருவெடுக்கிறது. இவ்வாறு ஐவந்தரை விழாவையொட்டி வழங்கும் புராணக்கதையில் கண்ணன் ராதையைத் தாம்பூலமாக்கிய வரலாறு கூறப்படுகிறது.

## அரசனும் ஆசாரியும்

350 ஆண்டுகளுக்கு முன்பு மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த பெருமன்னன் திருமலைநாயக்கர். இவன் கலையார்வம் மிக்கவன். இம்மன்னன் காலத்தில்தான் மதுரையில் உள்ள நாயக்கர் அரண்மனை, இராயகோபுரம், புதுமண்டபம் முதலியன கட்டப்பட்டன. தெப்பக்குளம் வெட்டுவிக்கப்பட்டது. இம்மன்னனிடம், சுமந்திரமூர்த்தி ஆசாரி என்பவன் பணிபுரிந்துவந்தான்.

ஒரு நாள் சுமந்திரமூர்த்தி ஆசாரி ஒருருவத்தைச் செதுக்குவதில் மெய்மறந்து ஆழ்ந்து கிடந்தான். வெற்றிலை பாக்கு போடவும் ஓய்வு ஒழிவு இன்றிச் சிற்பம் செதுக்குவதில் கருத்தூன்றி இருந்தான். அவனுக்கு வெற்றிலை மடித்துக்

கொடுக்கும் பையனை ஏதோ ஒரு வேலையாக வெளியில் அனுப்பியவன் பையனை வெளியே அனுப்பியதை மறந்து, பின்னால் பார்க்காமல் கையை நீட்டிக் கொண்டு வெற்றிலை பாக்கு கேட்டான். அந்த நேரத்தில் மண்டப வேலையைக் கண்காணிக்கும் பொருட்டு திருமலை நாயக்கர் அங்கு வந்திருந்தார்; ஆசாரி வெற்றிலைப் பாக்கு கேட்டதைக் கண்டு வெற்றிலையைக் கிழித்துச் சுண்ணாம்பு தடவி பாக்கைப் பொடி செய்து சுருள் பண்ணிக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஆசாரியும் பையன் கொடுப்பதாக எண்ணி வாங்கி வாங்கி வாயில் போட்டு மென்று கொண்டு வேலையை ஊன்றிச் செய்து வந்தான். தற்செயலாகத் திடீரென்று ஆசாரி திரும்பியபோது வெற்றிலைச் சுருளைக் கொடுத்துக் கொண்டிருந்தவர் திருமலை மன்னர் என்றறிந்ததும் நடுநடுங்கி, "ஐயோ! அரசே, என்ன தவறு செய்துவிட்டேன்"! என்று வருந்தி வெற்றிலைச் சுருளை வாங்கிக் கொண்டிருந்த இரண்டு விரல்களையும் தன்கையில் இருந்த சிற்றுளியால் உடனே வெட்டிக் கொண்டான். திருமலை நாயக்கர் அவனது அரச அன்பையும் உண்மைத் திறமையும் கண்டு பாராட்டி இரண்டு விரல்களையும் பொன்னால் செய்து கொடுத்தார்.15

வெற்றிலை பாக்கை மையமாகக் கொண்டு மேலே சொல்லப்பட்ட கதை இன்றும் பாண்டிய நாட்டில் வழங்கி வருகிறது.

## தில்லையில் தேரோட்டிய இலை வாணிகன்

தில்லையில் விழாக் காலங்களில் வழக்கம் போல் ஓடும் தேர் ஒரு சமயம் ஓடவில்லை. தேர் ஓட வேண்டுமானால் நரபலியிட வேண்டுமென்றும் நரபலிக்கிரையாகுபவன் ஒருத்திக்கு ஒரு மகனாகவும், குற்றம் குறை அற்றவனாகவும் இருக்க வேண்டுமென்று அரசனிடம் ஊர்ப்பெரியோர்கள் முறையிட்டனர். மேற் குறித்த தகுதிகள் அனைத்தும் நிறைந்தவனாக வெற்றிலை வணிகன் ஒருவன் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

அரசு தொல் பொருள் ஆய்வுத் துறை
எண் 5905
தேதி

தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றிலே வணிகன் தானே தன் தலையை வெட்டிக் கொள்ள ஒப்புக்கொண்டு வெட்டிக் கொள்வதற்கு முன்பு ஒரு வேண்டுகோளும் விடுத்தான்.

அதாவது தான் இறந்துபட்ட பின்பு தன் இனத்தவரே தில்லைக் கோயில் இடது சிறகில் குடியேற வேண்டுமென்றும் அப்படிக் குடியிருக்கும்போது இறப்பு ஏற்பட்டால் அக் கோயிலேச் சார்ந்தவர்களே அவனுக்கு இறுதி மரியாதையாக வாய்க்கரிசி, கோடித்துணி, வெற்றிலே, பாக்கு முதலியன கொடுத்து மரியாதை செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து கீழ்க்கண்டவாறு தம்மைப் பலியிட்டுக் கொள்ளத் தயாராஞன். தன்காலின் பெருவிரலில் ஒரு வட்டமான வளேயத்தை மாட்டிக் கொண்டு, அதிலிருந்து கழுத்து வரை நீண்ட இரும்பு சங்கிலியை இணேத்து, சங்கிலி முனேயில் துரட்டி என்ற கத்தியைக் கட்டி கழுத்தில் மாட்டிக் கொண்டு தாஞகத் தன் காலே உதைத்து தன் கழுத்தை அறுத்துக் கொண்டு தன் உயிரை அர்ப்பணித்துக் கொண்டான். பின்னர் தேர் ஓடியது.

1. தமிழக நாட்டுப் பாடல்கள் – மு. வை. அரவிந்தன். பக்கம். 15. (1965)
2. தமிழக நாட்டுப் பாடல்கள் – மு. வை. அரவிந்தன், பக்கம் 21. (1965)
3. நாடோடிப் பாடல்கள்–ஆர். அய்யாச்சாமி, பக்கம், 15. (1959)
4. ஏட்டில் எழுதாக் கவிதைகள் – செ. அன்னகாமு, பக்கம். 108. (1959)
5. தமிழ் நாட்டுப் பாமரர் பாடல்கள்–நா. வானமாமலே பக்கம். 34 (1960)
6, பொன்மேனி பகுதியில் கட்டுரை ஆசிரியர் திரட்டியது

7 இப்பாடலை கட்டுரை ஆசிரியருக்கு அளித்தவர், திருமதி. ச. லட்சுமி.

8. காற்றில் வந்த கவிதைகள் – பெ. தூரன். பக்கம். 87, (1963)

9 சொன்னவர், எஸ். தனம்மாள், வடஆற்காடு மாவட்டம்.

10. சொன்னவர் திரு. மா. கணபதி. திருநெல்வேலி மாவட்டம்.

11. இது தஞ்சாவூர், இராமநாதபுரம் மாவட்டங்களில் வழக்கில் உள்ளது.

12. இது தஞ்சாவூர் மாவட்டத்தில் வழக்கில் உள்ளது.

13. தமிழில் விடுகதைகள் – டாக்டர். ச. வே. சுப்பிரமணியன், பதிப்பு. (1976)
பார்க்க எண்: 289, 511, 940, 1077, 1146, 1223, 1529, 1573, 1752, 1879, 2006, 2077 2155.

14. நாடோடிப் பாடல்கள் – ஆர். அய்யாச்சாமி, பக்கம். 99-100.

15. மதுரை நாயக்கர் வரலாறு - அ. கி. பரந்தாமனர், பக்கம். 219–220. பதிப்பு (1966).

# சேனையார் வாழ்க்கையும் மரபும்

பாண்டிய நாட்டில் சேனையார் என்ற பட்டப் பெயரில் உள்ள மக்கள் வெற்றிலைக் கொடிக்கால் பயிரிடுகின்றனர். இவர்களின் இனப் பிரிவுகள்

1 கொடிக்கால் பிள்ளைமார்
2. கொடிக்கால் முதலியார்
3. கொடிக்கால் மூப்பனார்
4. கொடிக்கால் செட்டியார்

என்று அழைக்கப்படுகின்றது. இவ்வினப் பெயர்களுக்கு முன்னர் சேனையார் என்ற பட்டத்தையும் சேர்த்துக் கொள்கின்றனர் இவர்களுக்குள் 'மண உறவு' உண்டு.

இவர்கள் தங்களை சுப்ரமணியரின் படைத் தலைவனை வீரபாகுவின் வழி வந்தவர் எனக் கூறிக் கொள்கின்றனர். சேனைக்கு வீரபாகு தலைமை தாங்கி நடத்தியதால் பரிசாக சேனையார் என்ற பட்டத்தையும் பரிசுப் பொருளாக வேலி லிருந்து கிள்ளிக் கொடுத்த இலைக் கொடியையும் பெற்றான். இதுவே பின்னர் இவ்வினத்தவர்களால் பயிரிடப்பட்டு வந்த வெற்றிலையாகும் எனக் கூறிக் கொள்கின்றனர்.

மதுரை மாவட்டத்தில் பொன்மேனி, சோழவந்தான், சிந்தாமணி, ஐயனார்புரம், பனையூர் ஆகிய இடங்களிலும் நெல்லை மாவட்டத்திலும், ஆத்தூர் உடன்குடி முதலிய பகுதி களிலும் இராமநாதபுரம் மாவட்டத்திலும், திருப்பூவனம் ஆகிய இடங்களிலும் இவ்வின மக்கள் வெற்றிலைக் கொடிக் காலுடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

கொடிக்காலில் பூச்சி தாக்குவதால் ஏற்படும் பச்சாலை என்னும் நோயை விரட்டுவதற்காக 'பச்சாலை விரட்டு'

என்னும் சடங்கு மேற்கூறிய இனத்தவர்களால் நடத்தப் படுகிறது.

## பச்சாலை விரட்டும் முறை

பச்சாலை விரட்டும் இச்சடங்கு பொன்மேனிப் பகுதியில் கீழ்க்கண்ட முறையில் நடைபெறுகின்றது. கொடிக்கால் பிள்ளைமார்கள் வெற்றிலைக் கொடிநடுமுன் கொடிக்காலில் ஒன்று கூடிப் பொங்கலிடுவர். இப்பொங்கல் சப்த கன்னி மார்களாகக் கருதப்பட்ட ஏழு செங்கற்கள் முன்புள்ள எருக்கம் இலையில் படைக்கப் பெறும். அழகர் கோயிலில் இருந்து தீர்த்தமும், விபூதியும் கொண்டு வரப்படும். பின்பு சேவலை அறுத்துக் காவு கொடுப்பர். அறுத்த சேவலின் இரத்தம் சூளைக்கரைச் சாம்பல் முதலானவற்றைப் புதுமண் கலயத்தில் இட்டு வேப்பிலை கொண்டு தெளிப்பர். கிராமிய மேளங்கள் பின் தொடர ஆடையற்ற நிலையில் உடம் பெல்லாம் கரும்புள்ளி குத்தப்பட்ட சிறுவர்


'தெற்கே போ பச்சாலை, வடக்கே போ மாயாண்டி'

என்று கூறிக் கொண்டு செல்வர்.

இதனைப் பச்சாலை விரட்டு என்று அழைப்பர். இச்சடங்கு ஆண்டு தோறும் கொண்டாடப் பெறும். இவ்விழாவினுக்கு பின்பே வெற்றிலைக் கொடியினைப் பாத்திகளில் நடுவர். இப்படி செய்வதால் வெற்றிலை நோயில் விழ இருக்கும் பூச்சிகள் அழியும், கண்ணேறு கழியும் என்பது கிராம மக்களின் நம்பிக் கையாகும்.

## வெற்றிலை பற்றிய நம்பிக்கைகள்

1. வெற்றிலையை மகாலக்ஷ்மியின் சின்னம் என நம்புதல்.
2. வெற்றிலை காலில் பட்டு விட்டால் கண்ணில் ஒற்றிக் கொள்ளுதல்.



வெற்றிலை வைக்கும் பெட்டி

3. சுமங்கலிப் பெண்கள் செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளில் வெற்றிலை போடுதலால் இல்லத்தில் மங்கலம் ஏற்படும் என எண்ணுதல்.

4. வீட்டை விட்டுப் புறப்படும்போது தாம்பூலம் தரித்தவர் எதிரே வந்தால் மங்கலமாய் கருதுதவல்.

5. சுபகாரியங்களை உறவினர்களிடமோ பெரியோர் களிடமோ தெரிவிக்கச் செல்லும் பொழுது வெற்றிலை பாக்கு எடுத்துச் செல்லுதல்.

6. வெற்றிலை பாக்கு மாற்றிக் கொள்வதால் திரு மணத்தை நிச்சயம் செய்வதாய்க் கருதுதல்.

7. மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டிற்கு ஊர்வலமாய் செல்லும்போது பல்வேறு மங்கலப் பொருட்க ளுடன் வெற்றிலை பாக்கையும் எடுத்துச் செல்லுதல்.

8. 'தாலி கட்டு' முன்பு தாம்பாலத்தில் வெற்றிலை பாக்கு வைத்து அதன் மீது தாலியை வைத்தும் சபையில் ஆசி பெறுவதால் மங்கலம் ஏற்படுவதாக நம்புதல்.

9. திருமணத் தம்பதிகளை வீட்டிற்கு அழைத்து வரும் போதும், புதுமனைப் புகுவிழாவின் போதும் தட்டில் மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்து அந்நீரில் வெற்றிலை யைக் கிள்ளிப் போட்டு ஆராத்தி எடுத்தல் இதனால் 'கண்ணேறு' நீங்கி மங்கலம் அடைவதாக நம்புதல்.

10. வெற்றிலையை வீட்டுத் தோட்டங்களில் வளர்த்தால் தீய நிகழ்ச்சிகள் நடக்கும் என நம்புதல்.

11. வெற்றிலை தோட்டத்தில் மிதியடி போட்டுச் செல்ல அனுமதிப்பதில்லை.

12. பொன்னேர் பூட்டும்போது படைத்த வெற்றிலையை மாட்டிற்கு ஊட்டுதல்.

13. வெற்றிலைத் தோட்டத்திற்குள் பெண்கள் சென்றால் வெற்றிலைக் கொடி பட்டுவிடும் என நம்புதல்.

14. கணவன் இறந்த பின்னர் பெண்கள் தாம்பூலம் போடுவதில்லை.

15. இறந்தவன் கையில் வெற்றிலை பாக்கு கொடுத்தல்.

16. இறந்தவன் வாயில் வெற்றிலை பாக்கை எடுத்து வைத்து வெள்ளைத் துணியால் 'வாய்க்கட்டு' போடுதல்.

17. இடுகாட்டிற்குப் பிணத்தை எடுத்துச் செல்லும் போது வழி நெடுக வெற்றிலை, பாக்கு, பொரி ஆகியனவற்றைக் கலந்து தெளித்துச் செல்லுதல்.

18. கிராமப் புறங்களில் ஊர்ப் பஞ்சாயத்து கூடும் போது வழக்கு கூற விரும்புவோர் தட்டு ஒன்றில் வெற்றிலையும் பாக்கும் வைத்தல்.

19 பஞ்சாயத்தார் தீர்ப்பு சொன்ன பின்பு தீர்ப்பை வாதி, பிரதிவாதி இருவரும் ஒத்துக் கொண்டால் பஞ்சாயத்தார் இருவர் கொணர்ந்த வெற்றிலைத் தட்டையும் எடுத்து ஒன்றுக்கி முதலில் வாதியை வெற்றிலையை எடுத்துப் பிரதிவாதி கையில் கொடுக்கச் சொல்லுவர். அதே போன்று பிரதிவாதியை வாதியின் கையில் கொடுக்கச் சொல்லுவர் அதன் பின்பு ஊர்க்காவல் ஊருக்கு வெற்றிலை பாக்கு கொடுப்பார்.

# மருத்துவத்தில் வெற்றிலை

தமிழ் நாட்டில் பல மாவட்டங்களில் வெற்றிலையைப் பயிரிட்டு வருவோர் கொடிக்கால் பிள்ளைமார், கொடிக்கால் மூப்பனர் முதலியோர் ஆவார். இவர்கள் பருவகாலங்களில் கொடிக்காலில் விளையும் வெற்றிலையைக் கிள்ளி அடுக்காகவும், கட்டாகவும் ஊர்ச் சந்தைகளில் விற்று வாழ்கின்றனர். கொடிக்காலைச் சூழ்ந்துள்ள பகுதி வாழ் மக்களுக்குப் பல்வேறு சூழ்நிலைகளில் ஏற்படும் சிறு பிணிகளுக்கும், பெரு நோய்களுக்கும், பாம்பு, தேள், பூரான், செய்யான் போன்றவற்றின் விஷக்கடிகளுக்கும் மருத்துவமனைகளை நாடாமல் அவர்களால் பயிரடப்படும் மூலப்பொருளான வெற்றிலையைக் கொண்டே நீக்கிக் கொள்கிறார்கள்

கிராம மக்களும் மருத்துவர்களும் இவ்வெற்றிலையின் இலை, காம்பு, கொடி, வேர் ஆகியவற்றைப் பெரும்பாலான நோய்களுக்கு உரிய முறையில் பயன்படுத்தி வெற்றியும் கண்டுள்ளனர். இது அவர்களின் எளிமையான வாழ்க்கையை மட்டும் காட்டுவதோடல்லாமல் கிராம மக்களின் நுண்மையான மருத்துவ அறிவையும் நீண்ட அனுபவத்தையும் தெளிவு படுத்துகிறது. இவற்றை மருத்துவ நூல்களும் உறுதிப் படுத்துகின்றன.

வெற்றிலை, பாக்கு, சுண்ணும்புடன் வால் மிளகையும் கூட்டிச் சுவைப்பதால் சீரணம் உண்டாகும். வாய் மணக்கும். மனத்திற்கு உற்சாகம் அளிக்கும். பற்கள் கரையாமல் அசைவு நீங்கி உறுதிப்படும்.

வெற்றிலையை சாறுபிழிந்து கண்ணில் இட்டால் கண் வலியும், காதில் இட்டால் காது வலியும் நீங்கும்.

கண்ணின் இமைகள் துடித்தலுக்கு வெற்றிலைச் சாற்றில் சுக்கை உரைத்துக் கண்ணிலிட்டால் இமை துடித்தல் நிற்கும்.

வெற்றிலை, சுக்கு, மிளகு இம்மூன்றையும் மென்று விழுங்கி வெந்நீர் குடித்தால் வாயுவைப் போக்கும்.

கருப்பு வெற்றிலையையும் கற்பூரவள்ளி இலையையும் அனலில் காட்டிச் சாறு பிழிந்து பூசினல் தலைவலி சில நிமிடங்களில் நீங்கும்.

வெற்றிலையின் முனையைக் கிள்ளி நெற்றியின் இரண்டு பொட்டுகளிலும் ஒட்டிவிட்டால் உஷ்ணத்தால் உண்டான தலைவலி நீங்கி குணமேற்படும்.

வெற்றிலையில் எண்ணெய் பூசி அகல் விளக்கில் இளஞ்சூடாக்கி நெஞ்சில் இட்டால் கபம், இருமல் நீங்கும்.

காரமுள்ள கருப்பு வெற்றிலையின் ரசத்தைப் பருகினல் கபம், சீதளம், காணுக்கடியின் துர்க்குணம் முதலியன நீங்கும்,

கருப்பு வெற்றிலையுடன் மிளகையும் கறுக்கித் தேனில் கலந்து கொடுத்தால் குமட்டல், வாந்தி நிற்கும்.

வெற்றிலையுடன் மாகபிரசண்ட மாருதம் என்னும் மருந்தை வைத்து உட்கொண்டால் இரைப்பு, காசம் முதலியன தீரும்.

கருப்பு வெற்றிலையின் மீது சுண்ணும்பு தடவி, மிளகு சிறிது கூட்டி ஆழாக்கு நீர்வைத்து, அதை அரை ஆழாக்காகக் காய்ச்சித் தயாரித்த மருந்தை குழந்தைகளுக்குக் கொடுத்தால் வாந்தி வருவது நிற்கும்.

வெற்றிலை, திருநீற்றுப்பச்சிலை, துளசி, கற்பூரவல்லி, விஷ்ணுகிரந்தி முதலியவற்றால் தயாரிக்கப்படும் கஷாயத்தால் குழந்தை பிணி தீரும்.

வெற்றிலையில் விளக்கெண்ணெயைத் தடவி, அனலில் வாட்டி உந்தியைச் சுற்றி அடிவயிற்றில் போட்டால் உஷ்ணத்தினால் உண்டான வயிற்றுவலி, வயிற்று உப்புசம் தீரும்.

வெற்றிலையும் ஓமமும் சமஎடை கூட்டி இடித்து, பிழிந்து அச்சாற்றுடன் தேன் கலந்து பருகினால் வயிற்றுப் பொருமலுடன் கூடிய வயிற்றுப்போக்கு அல்லது கிராணி உடன் நீங்கும்.

வெற்றிலையில் சில உப்புக்கல்லை வைத்து மடித்து சாப்பிட்டால் வயிற்றில் ஏற்படும் குத்துவலி நீங்கும்.

வெற்றிலையில் சுண்ணாம்பு பூசி அதை மண்சட்டியிலிட்டுக் கருக்கி 1 படி நீரை வார்த்து அதை $\frac{1}{8}$ பாகமாய் செய்து குடித்தால் மயக்கம், வயிற்று நோய், அஜீரணம் தீரும்.

கடல்தேங்காய் (திருவோடு) சூரணத்தை வெற்றிலையில் வைத்து 7 நாட்கள் உட்கொண்டால் ரணங்கள் மாறும்.

கற்பூரச் சிலாசத்து என்னும் உபரசத்துடன் வெற்றிலையை விழுதாக்கிக் கவசம் செய்து எருவில் புடமிட்டு எடுத்த பஸ்பத்தைத் தேனில் கலந்து கொடுத்துவந்தால் முடக்கு வாதம் நீங்கும்.

வெற்றிலையில் கடுகளவு நாகத்தின் பித்தை எடுத்து தடவி உள்ளுக்குக் கொடுத்துவந்தால் மேகநோய் நீங்கும்.

அழிக்கொடிக்கால் வெற்றிலே, அரிசி, மிளகு, வெந்தயம் இவற்றை அரைத்து; கொதிக்க வைத்து; அதன் ஆவியை நுகர்ந்து; பின்பு அளவோடு அந்நீரில் பசும் வெண்ணெயைச் சேர்த்துக் குடித்தால் கால்வீக்கம், பாண்டு நோய் முதலியன நீங்கும்.

வெற்றிலேயில் சுண்ணும்பு தடவிக் கறுக்கி, கஷாயமாக்கித் தினமும் குடித்து வந்தால் விடாத தாகம் அடங்கும். தொண்டை வறட்சி மாறும். இதனே, விடாத தாகத்திற்கு வெற்றிலேக் கஷாயம்' என்ற மருத்துவமொழியால் அறிலாம்.

வெற்றிலேயுடன் நாகத்தைச் சேர்த்து அரைத்துப்புடம் போட்டு எடுத்த பஸ்பத்தைத் தேன் அல்லது வெண்ணெய் கலந்து உட்கொண்டால் மூலம், மூலபௌத்திரம், கொடி பௌத்திரம் முதலிய நோய்கள் நீங்கும்.

கற்பூரவெற்றிலேயை விளக்கெண்ணெய்யில் வாட்டி, சாறு பிழிந்து சமஅளவு தேன் கலந்த கலவையில், சூடத்தை எரிய வைத்து அணேத்து பின் அக்கலவையைக் குழைத்து அளவோடு குழந்தைகளுக்குக் கொடுத்துவந்தால் பிடிதோஷம் கபம், சளி, சுரம் உப்பிசம் மாந்தம் முதலியன நீங்கும்.

'பேருகாலம்' ஆகாது அவதியுறும் பெண்களுக்கு 5 அல்லது 7 வெற்றிலேயைக் கொடுத்து மென்று தின்னச் சொன்னல் கொடுத்த ½ மணி நேரத்தில் சுகப்பிரசவம் நடக்கும்.

வெற்றிலேச் சாற்றுடன் தேன் கலந்து குடித்தால் நல்ல உடல் ஆரோக்கியத்தைப் பெறலாம்.

வெற்றிலேச் சாற்றுடன் உளுந்து அமுக்கராங்கிழங்கு ஆகிய இரண்டையும் கூட்டி உண்டால் நல்ல தாதுவிருத்தியும் உடல் வலியும் ஏற்படும்.

## வெற்றிலைக்காம்பும் மருந்துவமும்

வெற்றிலையின் காம்பினை மருந்துண்ட பின்பு வாயிலிட்டுச் சுவைத்தால் அது குமட்டலைத் தடுத்து வாந்தி வருவதை நிறுத்தும்

வெற்றிலைக்காம்பு, எலி அழுக்கு இவற்றை தேங்காய் எண்ணெய்யில் தேய்த்தால் சளி முறியும்.



வெற்றிலைக் கொடி

வெற்றிலைக்காம்பு மிளகு சிறுகீரை அவுரி ஆகியவற்றை நறுக்கி அரைப்படி தண்ணீரில் கொதிக்க வைத்து அந்த அளவோடு கொடுத்து வந்தால் எல்லாவிதமான விஷக்கடியும் நீங்கும் வயிற்றுப்புண்ணும் ஆறும்.

வெற்றிலைக்காம்பு, மிளகு இரண்டையும் பசுவின் கோமியத்தில் அரைத்துக் கலக்கி வடிகட்டிய சாற்றை தலைக் குளித்த பெண்களுக்குத் தினமும் மூன்று வேளை கொடுத்து வந்தால் மலடு நீங்கும். கர்ப்பசூலையும் மாறும். கிராம மக்கள் சிறு குழந்தையின் மலபந்தம் நீங்க வெற்றிலைக் காம்பைப் பயன்படுத்துவர்.

## வெற்றிலை வேரும் மருத்துவமும்

வெற்றிலை வேரைத் தொடர்ந்து மெல்லுதலால் பாடகர்களின் சாரீரம் தெளியும்.

வெற்றிலை வேர் கண்டங்கத்திரிவேர் ஆடாதொடை வேர் ஆகியவற்றைக் கஷாயம் செய்து காலை மாலை குடித்து வந்தால் எட்டுவகை காசமும் மாறும்.

வெற்றிலைக் கொடியின் இளம் வேர்களை மிளகுடன் சேர்த்து உண்டால் பெண்கள் மலடு ஆகி விடுவார்கள்.

## விஷம் நீக்கும் வெற்றிலை

வெற்றிலையில் ஆண் பெண் என்று இரண்டு வித இலைகளுண்டு ஆண் வெற்றிலை நீண்டும், பெண் வெற்றிலை உடல் அகன்றும் இருப்பதுண்டு. தேள் கொட்டிவிட்டால் ஒரு சிட்டிகை சீயக்காய் தூளை ஆண்களுக்கு பெண் வெற்றிலையிலும் பெண்களுக்கு ஆண் வெற்றிலையிலும் மடித்துக் கொடுத்தால் விஷம் இறங்கும் வலியும் நீங்கும்.

வெற்றிலையைக் காடியில் அரைத்து உட்கொண்டால் எல்லாவிதமான விஷக்கடிகளும் குறையும்.

நல்லபாம்பு கடித்தால் அதனுடைய பித்தை (Bill) வெற்றிலையில் மடித்து விழுங்கினுல் விஷம் இறங்கும்.

வெற்றிலை, மிளகு, உப்பு இம்மூன்றையும் ஒன்று கூட்டி மென்று விஷக்கடிப்பட்டவர்களின் கண் காது மூக்கில் ஊ தினல் மயக்கம் தெளியும் விஷமும் நீங்கும்.

வெற்றிலையும் வெள்ளாட்டு பச்சைக் கறியையும் நன்முக அரைத்து பாக்களவு கொடுத்தால் சகல விதமான விஷங்களும் நீங்கும்.

சுக்கு, வெற்றிலை இரண்டையும் எடுத்து வாயில் போட்டு கொண்டு அதை வாயை மூடிக் கொண்டு மென்று பாம்பு போன்ற விஷ ஜந்துக்களால் கடியுண்ட மனிதனுக்கு மூக்கில் ஊத வேண்டும். ஆடு, மாடு போன்ற கால்நடைகளாக இருந்தால் அவற்றின் காதில் ஊத வேண்டும் விஷம் உடனே நீங்கும்.

முள்ளுச் சங்கையிலையை நிழலில் உலர்த்தி ஒரு மண் பானையில் போட்டு எரித்துச் சாம்பலாக்கிய பஸ்பத்தில் இரண்டு சிட்டிகை எடுத்து இவற்றுடன் 4 மிளகும் வெற்றிலையும் வைத்து உட்கொண்டு நீர்பருகினல் தேள்கடியின் விஷம் நீங்கி குணமேற்படும்.

வெற்றிலைச் சாற்றைப் பிழிந்து 6 அவுன்ஸ் எடுத்துக் கொண்டு அதில் 25 கிராம் மிளகை நன்முக ஊறவைத்து உலர்த்திப் பொடி செய்து கொண்டு அதை அளவோடு மூன்று வேளை கொடுத்து வந்தால் பூரான் கடியின் விஷம் நீங்கி குண மேற்படும்.

'செய்யான்' என்பது பூரானைவிட கொடிய விஷமுடையது இது கடித்தால் கொழுந்து வெற்றிலை, கோவையிலை, பருத்தியிலை, உத்தாமணியிலை, கொழுஞ்சியிலை, முடக்கற்றனிலை இவற்றை சமமாக எடுத்து அரைத்த சாற்றைக் கொதிக்க வைத்து இறக்கி இளஞ்சூட்டுடன் கடிவாயிலும், உடம்பிலும் தடவி வந்தால் குணமேற்படும்.

அரணை விஷமுறிவுக்கு வெற்றிலைச் சாறுடன் இஞ்சிச் சாற்றை கலந்து காலை மாலை கொடுக்கலாம்.

வெற்றிலையும் மிளகும் அரைத்து அதை பாக்களவு சாப்பிட்டு வென்னீர் பருகினால் எல்லா விதமான பாஷணமும் முறிவுபடும் நல்ல குணமும் ஏற்படும்.

நவ பாஷாணங்களை வெற்றிலைச்சாறு, கோவையிலைச்சாறு கொடிவேலி ஆகியவற்றைக்கொண்டு மருத்துவர் சுத்தப்படுத் துவர். பூரம் என்னும் பாஷாணத்தை வெற்றிலை, மிளகு சேர்ந்த கஷாயத்தால் மருத்துவர்கள் சுத்தி (Purification) செய்கின்றனர்.

கருணைக்கிழங்கு அதிக அளவு சாப்பிட்டதால் ஏற்பட்ட துன்பங்களுக்கு முறிவு வெற்றிலையாகும்.

வெற்றிலையில் சகலவிதமான மருந்துகளை வைத்து உண் டாலும் அம்மருந்துகளின் குணம் கெடுவதில்லை.

இத்துணை நன்மை பயக்கும் வெற்றிலையுடன் நல்லெண் ணெய் சேர்த்து உண்டால் மரணம் ஏற்படும். இதற்கு முறிவு தேங்காய் ஒன்றே ஆகும்.*

## வெற்றிலை தரிக்கக் கூடாதவர்கள்

தாபசுரம், மூர்ச்சை, சன்னிபாதம், தேகத்தில் தோய்ந்த விஷங்கள், பயித்தியம், சயம், மகோதரம் ஆகிய வியாதி உள்ளவர்கள் தாம்பூலம் தரிக்கக் கூடாது என மருத்துவ நூல் கூறும்.

## தாம்பூலம் தரிக்கும் முறை

தாம்பூலம் தரிக்குமிடத்துப் பாக்கை முதலில் வாயில் போடாமல், ஒரு வெற்றிலையை மென்று விழுங்கிய பிறகே பாக்கைப் போடவேண்டும்.

வெற்றிலை தின்னும்போது சுண்ணந் தடவிய பின் காம்பு, நுனி, நீண்ட நடு நரம்பு ஆகியவற்றை நீக்குதல் வேண்டும்.

பாக்கு, வெற்றிலை, சுண்ணம் மூன்றும் கூட்டி மெல்லும் பொழுது அதில் ஊறும் முதல்நீர் நச்சுத்தன்மை வாய்ந்தமை யால் அதை வெளியே உமிழ்ந்து நீக்குதல் வேண்டும் என மருத்துவ நூல்கள் கூறும்.

*மேற்கண்ட மருந்துக் குறிப்புக்களைக் கட்டுரை ஆசிரியருக்கு அளித்தவர்கள்:

1. சித்த வைத்திய சங்கம், மதுரை.
2. நந்தி நிறுவனம், சென்னை.
3. கொடிக்கால் பிள்ளைமார் சங்கம், பொன்மேனி, மதுரை மாவட்டம்.